நான் வெளியீடு 4

# மௌனங்கள் சுமையும்போது

தொகுப்பாசிரியர்: வி. பி.

P.C. 9

# மௌனங்கள்
# கலையும் போது ...

அன்பளிப்பு - தமிழ்ப்பிரியா

தொகுப்பாசிரியர்: வி. பி.

முதற்பதிப்பு: 10-11-85

விலை ரூபா: 5-00

நான் வெளியீடு
NAAN PUBLICATIONS
அமலமரித் தியாகிகள் சபை
யாழ்ப்பாணம்

R.C.9

# உட்புகு முன் ...

உயர்ந்த இலட்சியங்கள் இறப்பதில்லை; சிறந்த கருத்துக்கள் சிதைவுறுவதில்லை. உயர்ந்த இலட்சியங்களைக் கொண்டு வாழ்ந்தவர்கள் உடல் அழியினும், மனித உள்ளங்களில், மனித வரலாற்றில் அழியாத கோலங்களாக உயிர் வாழ்வார்கள்; எதிர்கால இளைய தலைமுறையினருக்கும் ஏற்ற மிகு கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்து வழிகாட்டுவார்கள்.

இந்த வகையில் அதிபர் ஆறுமுகத்தின் இலட்சியங்கள் அழியவில்லை; இலட்சியக் கனவுகள் சிதையவில்லை. வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் பாடமடி என்ற கவிஞரின் குரலின் அர்த்தம் அவரது வாழ்க்கையிலிருந்து புலனாகிறது. அத்தோடு அவரது மகன் மூர்த்தியின் மகத்துவத்தை வாசகர்கள் இலகுவில் புரிந்து கொள்வார்கள்.

அழகு தமிழில், இலகு நடையில் இந்த "மௌனங்கள் கலையும் போது" தொடர் நவீனத்தைத் தந்த எழுத்தாளர்களைப் பற்றிச் சில வரிகள்... —

### யாழ்பாலன்

"அவவுக்கு என்ன தெரியும்" குறுங்கதை மூலம் சென்ற ஆண்டு இறுதி 'நான்' இதழில் அறிமுகமான யாழ்பாலன் 'மௌனங்கள் கலையும் போது' தொடர்கதையின் மூலம் வாசகர்களின் மனதில் அழியாத இடத்தைப் பிடித்துள்ளார். "நான்" மஞ்சரியின் பணியினில் தன்னை அர்ப்பணித்து 'நான்' மூலம் சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்தத் துடிதுடித்துக் கொண்டிருக்கும் இளம் எழுத்தாளர் இவர்.

### ஆனந்தி செந்தில்

உணர்வுகளைத் தொடும் வகையில் உறவுகளை விமர்சிக்கும் அனுபவ எழுத்தாளரான ஆனந்தி செந்தில் இலக்கிய உலகத்திற்குப் புதியவர் அல்லர். எழுத்துலகில் ஆர்வத்தோடு அயராது உழைக்கும் இவரது எழுத்துநடை சற்று கடினமாகக் காணப்படினும் கருத்துகளின் மென்மை இவரது கதைகளுக்கு மெருகூட்டி நிற்கின்றது.

## வளவை வளவன்

விந்தன், தங்கம், வளவை வளவன், நீதி, என்ற புனை பெயர்களுள் மறைந்து ஏற்கனவே பல கதைகள், கவிதைகள் மூலம் இலக்கிய உலகிற்கு அறிமுகமானவர். சிறுகதை, கவிதை- இருதுறைகளிலும் பல பரிசுகள் பெற்றவர். சமூகத்தில் நிலவும் நிகழ்காலப் பிரச்சனைகளை மையமாக, யதார்த்த வாதத்தை முதன்மைப்படுத்தி உள்ளதை உள்ளபடியே கூறும் ஆற்றல் படைத்தவர்.

## றிமா

புதுமையான கோணத்தில் சிந்தித்து, புரட்சிகரமான சிற்பங்களுக்கு உருக்கொடுக்கும் றிமா தனது துணிகரமான கற்பனைத் திறனினால் 'நான்' வாசகர்களின் மனதினில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளார்.

## ஜனகமகள் சிவஞானம்

வானொலி நிகழ்ச்சிகளின் மூலம் தனது திறமையை வெளிப்படுத்தி வந்த ஜனகமகள் தற்பொழுது 'நான்'' வெளியீடுகள் மூலம் வாசகர்களைக் கவரவந்தமை பாராட்டுதற்குரியது.உண்மை உறங்குவதில்லை. உண்மை ஊமையாவதில்லை.

## சௌந்தரன்

யாழ். பல்கலைக்கழக பொருளியல் பட்டதாரியான சௌந்தரன் பொருளியலையும், உளவியலையும் சந்திக்கச் செய்வதில் சாமர்த்தியம் மிக்கவர். 'நான்' ஆடி-ஆவணி இதழில் வெளிவந்த 'விரக்தியின் எல்லையில்' கதைமூலம் பணவெறியின் எல்லையில்லா மோசடிகளைக் கூறி,மக்களின் மனதைக் கவர்ந்தவர்

"மௌனங்கள் கலையும் போது" என்ற இத்தொடர் நவீனம் வெறும் வாசனைரசத்திற்காகத் தொடரப்பட்ட தொன்றல்ல என்பதை ஒவ்வொரு படைப்பாளியும் புலப்படுத்தி நிற்கின்றார்கள். இவர்களின் அணுகுமுறை சமூகத்தில் வேரூன்றிப் போன,போலி வாழ்க்கை,வரட்டு கௌரவம்,உரிமைப் பிரச்சனை, குறைகாணுதல் என்று பலவாறு பல கோணத்தில் இதன் பாத்திரங்களை ஓடவிட்டு அதன் தாக்கங்களுக்கு சமூகத்தில் ஏற்படும் விளைவு நெளிவுகளை சீர்ப்படுததி' உயர்ந்த இலட்சியவாழ்வின் மூலம் மக்களை இலட்சியப் பற்றுள்ளவர்களாக வாழ வைத்து நிற்கின்றது மௌனங்கள் கலையும்போது ...

— வி. பி.

# மாறியது நெஞ்சம் ...



[ சிறுகதை ]

கமலா இளங்கோவன்
குருநகர்

அமைதியாகத் தோன்றியது அச் சூழ்நிலை. ஆனால் சாந்தியின் மனமோ குழம்பிக்கிடந்தது. நடந்து வந்த அவள் அவரது அறையை நோக்கிச் சென்றாள். அறைவாசலில் "உளவளத் துணையாளர்" என எழுதப்பட்டிருந்தது. அங்கிருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டாள். அழைப்புக் கிடைத்ததும் உள்ளே சென்றாள். உள்ளே நுழையும் பெண்மணியைத் தன் கண்களால் அளவிட்டுக்கொண்ட டாக்டர் முரளி அவளை அமரும்படி கூறினார் தயக்கத்துடன் அமர்ந்த சாந்தியிடம் "உமது பெயர் விபரங்களை நான் அறிந்து கொள்ளலாமா? என அமைதியான குரலில் அவர் கேட்கவும் "என் பெயர் சாந்தி கிளிநொச்சியிலிருந்து வருகிறேன்" என்றாள். அப்படியா! உமது குடும்பத்தில் எற்பட்டுள்ள குழப்பத்தை கூறுகிறீரா?" என்ற அடுத்த கேள்வியைக்கேட்டு பெரும் அதிர்ச்சி அடைந்தாள் சாந்தி. "இவருக்கு எப்படித் தெரிந்தது" அவள் உள்ளம் திகைத்தது. "ஒருவரின் நடை உடை, பாவனைகளைக் கொண்டு அவர்களைப்பற்றி அறியும் உளவியல் திறமை அவருக்கு இருப்பதை சாந்தி அறிவாளா? "தயங்கவேண்டாம் உமது பிரச்சனையை கூறும்" என்ற அவரின் குரல் கேட்டு அதிர்ச்சியில் இருந்து மீண்ட சாந்தி, "எனக்கு வாழ்க்கை நிமிடத்திற்கு நிமிடம் சாகின்ற வாழ்க்கை நிம்மதியே கிடையாது. என் சிநேகிதி மேரியும் இல்லை என்றால் நான் என்றோ செத்திருப்பேன்" என கண்கள் கலங்கிக் கூறினாள்,

"கவலைப்படாதேயம்மா" என்று டாக்டர் அவளது பதட்டநிலையை படிப்படியாகப் போக்கினார். அவள் தனது வாழ்க்கை அனுபவங்களை வார்த்தை வடிவாக்கினாள்.

நான்கு பெண் பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் மூத்தவள் சாந்தி தந்தை பொன்னுசாமி ஒரு சாதாரண விவசாயி. ஆயினும் கஷ்டப்பட்டு சாந்தியை பட்டதாரியாக்கினார். சாந்தியின் நல்லகாலம் உடன் ஆசிரியர் வேலை சொந்த இடமான கிளிநொச்சியிலேயே கிடைத்தது. **ஒரு தேவை பூர்த்தியாக்கப்பட புதிய தேவைகள் தோன்றுவது மனித வாழ்வின் இயல்புதானே?** சாந்தியின்

நான்

திருமணப் பிரச்சனை ஆரம்பமானது- சாந்தி ஒரு பட்டதாரியே தனக்கு கணவனாக வரவேண்டுமென எதிர்பார்த்தாள். பொருளாதார நிலையில் தாழ்ந்து நின்ற சாந்தியின் பெற்றோர், திருமணச் சந்தையில் மாப்பிளையை விலைபேசினர். சீதனம், அன்பளிப்பு என இலட்சத்திற்கு மேல் விலை கூறப்பட்டது. அவ்விலையை கொடுத்து வாங்க முடியாத சாந்தியின் பெற்றோர் வேறு மாப்பிளை எத்தனையோ தேடினர். அவற்றையெல்லாம் தட்டிக் கழித்தாள் சாந்தி. ஒரு நாள் தந்தை பொன்னுச்சாமி சாந்தியிடம், "என்னம்மா இப்படியே தட்டிக்கழித்தால் என்ன செய்வது? உனக்கும் வயது போயிக்கொண்டிருக்கிறது. உனக்குப் பின் மூன்று பெண்கள் இருக்கிறதை மறந்து விட்டாயா? நீ நினைக்கும் மாப்பிளையை பார்ப்பதற்கு எமக்கு வசதியிருக்கிறதா? நான் தோட்டம் செய்து குடும்பத்தைக் காப்பாற்ற வில்லையா? "அதற்கு என்னப்பா செய்யச் சொல்லுகிறியள்" என்று குறுக்கிட்டாள்" சாந்தி பொன்னுச்சாமி தொடர்ந்தார்; "அவன் சிவலிங்கத்தின் பொடியன் மகேந்திரன். அவனை உனக்குச் செய்கிறதற்குக் கேட்டாங்க. உன்னிடம் கேட்டுச் சொல்லுகிறேன்" என்றேன். சீதனம் கேட்கவில்லை விரும்பியதைக் கொடுங்கள் என்கிறார்கள். மகேந்திரன் கொஞ்சம் கறுப்பு இதனைத் தவிர அவனில் என்னகுறை நல்ல உழைப்பாளி, குடி வெறி கிடையாது" என பெருமூச்சுடன் நிறுத்தி மகளின் முகத்தை ஏக்கத்தோடு பார்த்தார் பொன்னுச்சாமி. தன்னிடம் கெஞ்சி நிற்கும் தந்தையை சாந்தி நோக்கினாள். குடும்பத்திற்காக உழைத்து உழைத்து தேய்ந்து போன அவர் உடலைப் பார்த்தாள். பாசம் மேலிட அவள் கண்கள் கலங்கின; "எனக்காக இல்லாவிட்டாலும் குடும்பத்திற்காக என் மனதை மாற்றியமைக்கவேண்டும். தோட்டம் செய்பவனில் என்ன குறை? குணம் இருந்தால் அது போதாதா?" இப்படியான எண்ணங்கள் சாந்தியின் மனதில் அலைமோதின. "அப்பா நாளைக்கு பதில் கூறுகிறேன்" என்றாள். "சரியம்மா நீ நல்லா வாழவேண்டும். அதுதான் என் விருப்பம்" எனக்கூறிச் சென்றார்.

சாந்தியின் சம்மதம் கிடைத்ததும் திருமண அலுவல்கள் விரைவாக நடைபெற்று, நாளும் குறிக்கப்பட்டது. பட்டதாரியான நீ போயும், போயும் ஒரு தோட்டக்காரனை" என்றாள் ஜெயந்தி. உன் அழகிற்கு அந்த கரிக்கட்டையா கிடைத்தான்? நளினம் காட்டினாள் நந்தினி, ஆனால் சாந்தியின் வாழ்வில் அக்கறை கொண்ட மேரியோ "சாந்தி இந்த வால்களின் கதைகளை குப்பையில் போடு. உள்ளத்து அழகுதான் தேவையானது. உத்தியோக மாப்பிளை வேண்டும் என எதிர்பார்த்து, பொருளாதார இயலாமையால் சீதனம் கொடுக்க முடியாது தமது **இளமையை கரைத்துக்** கொண்டிருக்கிறார்கள் எமது **பெண்கள்** இந்த நிலையை மாற்ற வேண்டும்" என சிறு அறிவுரையே வழங்கிவிட்டாள்.

திருமணம் முடிந்து சில மாதங்கள் சென்றன. மகிழ்ச்சியாக சென்றுகொண்டிருந்த குடும்பம், திடீர்ப் புயலில் சிக்கிய மரக்கலம் போன்று தடுமாறத் தொடங்கியது. முன்பு பாடசாலையில் பிந்தி வந்தாலும் எதுவும் கூருத மகேந்திரன், சில ஊகங்களை தனக்குள் வைத்து, ''நீ அங்கே போனுயா? இங்கே போனுயா?'' எனக் கேட்கத் தொடங்கினுன். இதனுல் அவர்களிடையே சிறு மனக் கசப்புகள் ஏற்பட்டன. நாட்கள் செல்லச் செல்ல புதிய நண்பர்களும் புதுப் பழக்கங்களும் ஏற்படத் தொடங்கின. சிகரட்டே பிடிக்காதவன், நிதமும் மதுவால் நிலே தடுமாறி வீட்டுக்கு வரத் தொடங்கினுன். இப்படியான நேரங்களில் சாந்தி அலட்சியமாக இருந்து விடுவாள். சனி, ஞாயிறு தினங்களில் முன்பு சாந்தியை அழைத்துக் கொண்டு உறவினர் வீடுகளுக்குச் சென்றவன், சாந்தியை அழைத்துச, செல்ல மறுத்து "நான் வருவது உனக்கு மரியாதை இல்லே நீ போ" என குத்தலாக கூறுவான். இப்படியாக நாளுக்கு நாள் ஏதோ காரணங்களால் சாந்தி மீது குற்றம் சாட்டுவது மகேந்திரனின் வேலேயாக இருந்தது. சாந்திக்கு அவனேப் புரிந்து கொள்ளவே முடியவில்லே!!! நான் எது செய்தாலும் குற்றம் கூறுகிருர்? நான் அழகாக உடையணிவதை வெறுக்கிருர். யாருடனும் கதைப்பது விருப்பமில்லே. இத் திடீர் மாற்றத்திற்கு காரணம் யாது? விடை காண முடியாது குழம்பினுள் சாந்தி. அவளுக்கு வாழ்க்கையை நினேக்கும் போது வெறுப்புத்தான் தோன்றியது. சினேகிதி மேரியின் உறவும் இல்லேயென்ருல் அவளுக்கு விசர்தான் பிடித்திருக்கும். மேரியின் அறிவுரைகள்தான் அவளே வாழவைத்துக் கொண்டிருந்தது.

ஒருநாள் சாந்தி பாடசாலேக்கு புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள். "எனக்கு 50 ரூபா வேண்டும்'' மகேந்திரன். ''இப்போது என்னிடம் பணமில்லே'' என எரிச்சலுடன் கூறினுள் சாந்தி. "ஓமடி உனக்கு உழைக்கிறேன் என்ற திமிர். பட்டதாரி என்கின்ற தலேக்கனம். இன்றைக்கு பாடசாலேக்குப் போகப்போகிருயா?'' என்றவன் சாந்தியின் கையிலுள்ள பொருட்களேப் பறித்து வீசினுன். கோபமுற்ற சாந்தி "நீங்கள் என்னதான் நினேத்து விட்டீர்கள்? உங்களே போய் கலியாணம் செய்தேனே எனக்கு வேணும்'' எனக் கத்தி முடிப்பதற்குள் மகேந்திரனின் கை அவளின் கன்னத்தைப் பதம் பார்த்தது. "இனி பேசினுல் கொலே விழும்'' என்று கத்தி விட்டு வெளியேறினுன்.

அடி விழுந்த அதிர்ச்சியால் சற்று நேரம் அப்படியே நின்ற சாந்தி நூன் குலுங்கிக் குலுங்கி அழுதாள். "ஆண்டவனே எனக்கேன் இப்

படியான ஒரு வாழ்க்கையை அமைத்து விட்டாய்" எனத் தலையில் அடித்துக் கொண்டாள். அப்போது சாந்தியைக் காண வந்த மேரி சாந்தியின் நிலையைக் கண்டு "சாந்தி! என்ன நடந்தது" என்றாள். மேரியைக் கண்டதும் ஓவென கதறி அழுத சாந்தி 'பாத்தியா மேரி! என்ர வாழ்க்கையை? இப்படி ஒரு வாழ்வு தேவையா? திருமணம் செய்யாது இருந்திருக்கலாமே, எனக் கதறிய சாந்தி நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கூறினாள். அவற்றைக் கேட்ட மேரி "மகேந்திரன் உண்மையில் கெட்டவன் அல்ல இம் மாற்றங்களுக்கு ஏதும் இருக்க வேண்டும்" எனக் கூறி என்னை உங்களிடம் போகும்படி தூண்டினாள்.

சாந்தியின் வாழ்வு நிகழ்ச்சிகளைக் கேட்ட டாக்டர் முரளிக்கு பிரச்சினைக்கான காரணம் எது என்பது தெளிவாகப் புரிந்தது. மகேந்திரனின் தாழ்வு மனப்பான்மைதான் அதற்குக் காரணம் தான் அதிகம் படிக்காதவன். நிறத்தில் கறுப்பு என அவன் மனதில் கொண்ட தாழ்வு மனப்பாங்கினை அவனது நண்பர்களின் உபதேசங் களும் மேலும் வளர்த்து விட்டது. அதுதான் அவன் இந்நிலைக்கு மாறினான் என்பதனைப் புரிந்து கொண்ட டாக்டர், கவலைப்படாதே உன் கணவனின் மனமாற்றத்திற்குக் காரணம் அவனது தாழ்வு மனப்பான்மையே! என்றார். "டாக்டர் அதற்கு நான் என்ன செய்ய வேண்டுமென கூறுங்கள். கட்டாயம் செய்கின்றேன்". உறுதிதொனித்த குரலில் சாந்தி கூறினாள்.

"அம்மா சாந்தி! முதல் உனது விரக்தி மனப்பான்மையை விட்டொழி. மகிழ்ச்சியாக இரும். உமது அன்பான, ஆதரவான வார்த்தைகள், நடத்தைகள் தான் உமது கணவனின் மனநிலையை மாற்ற வேண்டும். உமது கணவன்தான் உமது எந்த விடயத்திலும் முக்கியமானவன் என்பதனை உமது சொல்லிலும், செயலிலும் காண்பிக்க வேண்டும். மற்றவர்கள் மத்தியில் உமது கணவனை புகழ்ந்து கூறும். வீட்டில் யாராவது உம்மைத் தேடி வந்தால் உமது கணவனை அவர்களுக்கு அறிமுகப்படுத்தும். உமது பேச்சு, செயல்கள் அனைத்திலும் உமது கணவனை நீர் பெரிதும் மதிக்கிறீர் என்ற உணர்வு அவனை ஆட்கொள்ள நீர் நடக்க வேண்டும் எனக் கூறி வழியனுப்பி வைத்தார். டாக்டர் சாந்தியின் உள்ளத்தில் சூழ்ந்திருந்த விரக்தி அகன்று ஒரு புத்துணர்ச்சியுடன் வீடு சென்றாள்.

(யாவும் கற்பனை அல்ல.)

**மனம் ஒத்த உறவே மகிழ்ச்சியானது.**

# மௌனங்கள் கலையும்போது...

(யாழ். பாலன்)

ஊர் அடங்கும் வேளையிலும் தான் உறங்காது சிந்தனையில் ஆழ்ந்திருந்தார் அதிபர் ஆறுமுகம். காரணம் வாழ்க்கைச் செலவு வரவை மிஞ்சியதாகவும் மைந்தன் மூர்த்தியின் கல்வியை தொடர, மகள் புவனாவின் எதிர்கால வாழ்க்கை அமைக்க மனைவியின் ஆறுதல் வார்த்தையை தவிர வேறு எதுவும் சேர்த்து வைக்க இல்லை. அதிபர் தன் கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி பலரது முன்னேற்றத்திற்கு ஏணிப்படியாக இருந்தாரே ஒழிய தன் பிள்ளைகளின் எதிர்காலத்தை இதுவரை அதிகம் சிந்திக்கவில்லை. ''ஊரார் பிள்ளைக்கு ஊட்டிவளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்; என்று அடிக்கடி கூறுவார். அதுபோலவே மூர்த்தியும் புவனாவும் தங்கள் கல்விச்சிறப்பால் சான்றுபகரும் பண்பும் பரிவும் தந்தைக்கு பெருமை தரும் சொத்து. கட்டுப்பாடும் கடமையும் தந்தையாரிடம் கற்றுக்கொண்ட பாடங்கள். மைந்தன் மூர்த்தி தந்தையின் சிந்தனைகளை உணரக்கூடிய வயது. தனது உயர்தரக் கல்வி பரீட்சையின் முடிவை எதிர்பார்த்திருந்தான். எதிர்காலத் திட்டங்களை நிறைவேற்ற தன்மீது உள்ள பொறுப்புக்களை எண்ணியவனாய் பத்திரிகையில் வேலைதேடும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டான், உள்ளூர் உழைப்பை விட வெளிநாட்டு ஊதியம் தான் இன்று பலர் மனதில் படுவதில் இவன் மனமும் ஊறியது. பத்திரிகையில் வரும் விளம்பரங்களை கண்டு முயற்சித்தான்' அவனது முயற்சியின் பயனை உடன் விபரங்களுடன் கொழும்பு வர அழைப்பு வந்தது. நாட்டு நிலை பதட்டமாக இருந்தாலும் வீட்டுநிலை கலக்கமாக இருப்பதனை உணர்ந்து தந்தையின் அனுமதி கேட்டு முடிவு செய்ய காத்திருந்தான். தந்தையிடம் தாயாரை தூது விட்டான்.

> பழிவாங்கல், பிரிவு, வெறி, தாழ்வுமனப்பான்மை, எதிர்பார்ப்பு ஆகிய அம்சங்களைக் கொண்டமைந்த தொடர்கதையே
> **''மௌனங்கள் கலையும்போது...''**
> இதன் ஆரம்பக் கட்டம் இதோ! மீதி உங்கள் கற்பனைகளில் பிறக்கட்டும்.

அதிபர் ஆறுமுகம் வீட்டிலும் நிர்வாகம் நடத்துவது. நேரசூசி படியேகாலையில் தன அறையில் பத்திரிகை புத்தகங்களை புரட்டி தனது சிந்தனையை "நான்" மஞ்சரியில் சஞ்சரிக்க விடும்போது காலைக்காப்பியின் சூட்டுடன், மைந்தனின் கோரிக்கையும் சேர்த்துக் கொடுத்தாள் அன்னை அன்போடு. அதிபர் பல கோணத்தில் கேள்விகளை தொடுத்து ஈற்றில் வெளிநாட்டுமுகவர் ஏமாற்று பேர்வழிகள். பிரயாண வசதிகளில் உள்ள இன்னல் என்றுமே செல்லாத மூர்த்தி முதல்முறை எப்படி கொழும்பு செல்வது. மகனை கூட்டிச்செல்ல அதிபருக்கு கல்லூரி கடமை முக்கியமாக உள்ளதையும் உணர்த்தி கொள்ளை, கொலை, பதட்டநிலைகளை தாண்டிச் செல்லும் துணிவு இருந்தால் செல்லலாம் என அனுமதியும் அளித்தார். அன்று மாலையே புறப்படத் தயாரானான் மூர்த்தி. பிரயாண செலவுக்கு தந்தை பல இடங்கள் சென்று 500 ரூபாவுடன் வந்தார். "மூர்த்தி உனது பிரயாண புகையிரத சீட்டு இதோ செலவுக்கும். தங்கையின் பாடப்புத்தகம் ஒன்றும் கொழும்பில் நீ செல்லும் இடத்தில் உள்ளதால் வாங்கி மறுநாளே திரும்பிவிடு" என 500 ரூபாதாளை மேசையில் வைத்தார் பிரயாணத்தில் பிற்பொக்கட் பேர்வழிகள் அதிகம். அருகில் இருப்பவர்களுடன் அவதானமாகவும் நித்திரை கொள்ளாது, உன் பொருட்களில் கவனமாக இருக்கவும். 500ரூபா கொழும்பில் சென்று மாற்றலாம். வழியில் எதுவும் வேண்டவேண்டாம், ஏமாற்றி விடுவார்கள்." என கூறியபோது தன் பிரயாண முதல் அனுபவத்தை வென்றுவர மனத்திடனுடன் ஆயத்தமானான்.

அன்னையும் புவனுவும் தங்கள் உதவிகளை உணவு பார்சலாகவும் தூங்காது விழித்திருக்க சில சஞ்சிகைகளையும் அப்பாவிடமிருந்து எடுத்து வைத்தார்கள். "அண்ணு எப்படியும் உடன் திரும்பிவிடு. எனது பிறந்ததினம் 14ம் திகதி அதற்குள் வந்துவிடு. உனது பரிசைத்தான் எதிர்பார்த்துள்ளேன்." என குறும்பு செய்தாள் புவனு.

முண்டியடித்து ஏறி ஒரு மூலையில் ஆசனம் கிடைத்ததே ஓர் வெற்றி என எண்ணியவனுய் அருகில் இருப்பவரை ஒரு நோட்டம் பார்த்து. அன்னையிடமும் தங்கையிடமும் கையசைத்து புறப்பட்டான். தந்தையின் அறிவுரையும் அவன்மனதில் அடிக்கடி நினைவூட்ட ஆனையிறவை கடப்பது இதுவே முதல்தடவை. இதுவரை வாழ்க்கை புத்தகஒரு பூச்சியாகவே கட்டுக்கோப்புக்குள் வாழ்ந்தவன். இன்று சிறகடித்து பறக்கும் பறவை போன்று புறப்படும் புது அனுபவம் புகையிரதத்தில் எவரையும் சந்தேகத்துடன் நோக்க வைப்பதில் வியப்பில்லைதானே.

அருகில் பலர் இருந்தும் பலரது சம்பாஷணை நோக்கும் அவனுக்கு அருகில் இருப்பவர் கௌரவமான உடையும் எடுப்பான தோற்றமும் ஓர் உயர் பதவி வகிப்பவர் என்பதை கூறும் அளவுக்கு இருந்தது. ஒருமுறை அவர் புகையிரத சிற்றுண்டிசாலையில் உணவு அருந்தச் செல்லும்போது மூர்த்தியிடம் தன் பொருட்களைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிச் சென்றார். அவனும் தலையசைத்து இருந்து விட்டான். பின்னர் திரும்பி வந்து நன்றி கூறி, நலம், நிலை, சொந்த இடங்களை வினவினர். அளந்து கூறி தன்கதைகளை குறைக்க முயன்றாலும், அவரது தொடர்பு மிகவும் நெருங்கிவர அதிபர் ஆறுமுகத்தின் சேவைதான் காரணமாக இருந்தது. அப்பாவுக்கு தெரிந்தவர் ஆதலால் அவர் அப்பாவின் நலங்களிலும் அவர் சேவையின் பெருமைதனையும், பறைசாற்றும் விதம் மூர்த்திக்கு பெருமை தரும் நினைவாக மலர்ந்தது. அதிபரின் நினைவை மூர்த்தியின் தோற்றத்திலும் அவருடைய பண்பான கதைகளிலும் காண்பதாக பாராட்டி பயணம் தொடர்ந்தது. நல்ல மனங்கள் கலந்த பிரயாண அனுபவம் கோட்டையில் நிற்கும்போது அதிகாலை 5மணியாதலால் உடன் புறப்படத்தயங்கிய மூர்த்தி சற்று நிலையத்தில் தங்கிச் செல்ல எண்ணினன். அந்தப் பெரியவரோ தனது பெயரை எழுதி தன்னையும் தந்தையிடம் நினைவுபடுத்தக்கூறினர். அவரது பெயர் டேவிட் என்று சொன்னல் அதிபர் ஆறுமகத்திற்கு தெரியுமாம். எனக்கூறி சற்று தன் பையையும் சூட்கேசையும் மூர்த்தியிடம் கொடுத்து அருகில் உள்ள தண்ணீர்குழாய்க்கு சென்றார். மூர்த்தி தனது பொருட்களையும் உடைகளையும் சரிபார்த்து தன்பணத்தை ஒருமுறை பார்த்தான். திகைத்தான் செய்வதறியாது துடித்தான் சிந்தனையின் சிதறல் திகைப்பைக் கொடுத்தது. தன்வசமுள்ள டேவிற்றின் கைப்பையைத் திறந்து பார்த்தான். அவன் பையில் அந்தப்பணம் 500ரூபா இருப்பதனைக் கண்டு உடன் அவனது வருகையை கண்ணோட்டம் விட்டவனாய் தன்பைக்குள் அதனை எடுத்து திணித்து முன்பிருந்தபடியே சரிசெய்கையில் எதிர்ப்புறம் ஒருவரது குரல்கண்டு தன்பதட்டத்தை குறைத்து குரலுக்கு செவிமடுத்தான். "தம்பி, காலை கண்டி செல்லும் வண்டி எத்தனை மணிக்கு வரும்?'' எனக் கேட்டார். "ஓ! அதுவா? இதுவரை ஒன்றும் செல்லவில்லை. இனிமேல்தான் போலும். தயவு செய்து அதுவரை நிற்பீங்களா? ஓர் உதவி செய்ய முடியுமா?'' என வினவினன். "என்னப்பா உன் கதை?'' என்று பெரியவர் வினவ, 'என்னுடன் வந்த ஒருவருடைய இப்பொருட்களை தந்து தற்போது தண்ணீர்தாங்கி பக்கம் சென்றுள்ளார். அவர் வரும் வரை நின்றால் நான் செல்லும் பஸ் புறப்பட்டுவிடும். தயவு

செய்து இதனை அவரிடம் கொடுப்பீர்களா?'' என அவசர அவசரமாக அவரிடம் கொடுத்துவிட்டுப் புறப்பட்டான் மூர்த்தி.

தங்கை புவனா அண்ணனின் வரவு ஆனந்தத்தை தரும் எனக்காத்திருந்தாள். அன்னையோ தினம் வரும் செய்திகள் கொலை, கொள்ளை, வழிப்பறி செய்திகள் திகில் தரும் வதந்திகள் இவற்றை தாண்டி மகன் வந்தாலே போதும். இனி எங்கும் செல்ல வேண்டியதில்லை. என இறைவனை துணைக்கு வேண்டி பிரார்த்தனை செய்தவண்ணம் காத்திருந்தாள் தந்தையோ புதிய தொரு விதத்தில் தான் அதிபர் பணியில் தண்டனைகளை எப்படிக் கொடுக்கலாம் என்று சிந்தித்தார். உடன் வரக் கூறினேன் சென்றதும் பதில் வரையவில்லை. தன்பொருட்களை கவனமாக எடுத்துச் செல்லாது, நற்சான்றிதழ்களை விட்டுச் சென்று விட்விட்டானே. எப்படி உருப்படப்போறான் உன் மகன். என அவரது மேசைமீது இருந்த என்வலப்பை பார்த்து திட்டியவராய் அதனைத் திறந்து பார்த்தார். அவ்வேளை மூர்த்தியும் தங்கைக்கு பிறந்தநாள் பரிசும், அன்னைசிப்பழக்கட்டும் தங்கைக்கு அப்பா கூறிய புத்தகம் ஏனைய பொருட்களுடன் முன் நின்றான். அன்னையோ வெளிநாட்டால் வந்த மகனை கண்டதுபோல் தங்கையோ தனது பரிசுப்பொருட்கள் மகிழ்வை தருவது போல், தந்தையோ தான் கொடுத்த 500ரூபா என்வலப்பினுள் அப்படியே இருப்பதனைக்கண்டு பலவாறு சிந்திக்கலானார். ''மூர்த்தி உனக்கேது பணம் இத்தனையும் வாங்க?'' ''அப்பா, நீங்கள் தந்த பணத்தில் தான் அத்தனையும் வங்கினேன்.'' 'மிகுதிப்பணம் இதோ' என சோதனை மேல் சோதனை. இவற்றை தாண்டி வந்ததே பெரிய சாதனை என அன்னைக்கும் தங்கைக்கும் தன்னைத்தானே புகழ்ந்து மூர்த்தி கூறினான்.

''மூர்த்தி, பொய்யும்பேசி, களவும் செய்ய எப்போ துணிந்தாய்? இதோ உனக்கு நான் தந்த பணம். இதனை கொண்டே செல்லாது என்ன திமிர், உனக்கு இப்படி கூற? நீ எனது மகன் என்று கூற'' என வார்த்தைகளைத் தொடர்ந்தார்.

தாயுள்ளம் கண்ணீர் வெள்ளமாய் திகைப்பாய் பார்த்தது. தங்கை புவனா புதிர் புரியாது திண்ணையில் மௌனமானாள். மூர்த்தியின் நினைவு அலை புகையிரத நினைவுடன் சங்கமித்தது. யாரிடம் யார் பழிவாங்குவது? இதனால் பழிவாங்கப்பட்டவர் நிலை என்ன? எல்லோர் மனமும் ஓர்கணம் மௌனமானது.

(தொடரட்டும்)

# மௌனங்கள் கலையும்போது... 2

ஆனந்தி செந்தில், ஏழாலை.

தன்னுடைய பணம் முழுவதையும், கொழும்பில் பறி கொடுத்து விட்டு, வெறும் கையோடு, வீடு திரும்பநேர்ந்து விட்ட அவமானத்தில் மனம் குழம்பிப்போயிருந்தார் டேவிட். அறைக்குள் செய்வதறியாது, அவர் படுத்துக் கொண்டிருந்தபோது, அவர் மனைவி மேரி உள்ளே வந்தாள். எளிதில் உணர்ச்சிவசப்படக்கூடிய முன்கோ பக்காரியான அவள், நிலைகுலைந்து படுத்துக்கிடந்த அவரைப்பொருட்படுத்தாமல், அவரது பெட்டியைத் திறந்து எதையோ தேடுகிறமாதிரி, உன்னிப்பாகப் பார்த்துவிட்டுச் சலிப்பான குரலில் "என்ன ஒன்றையும் காணேலை" நான் சொன்ன சாறி எங்கே? என்றாள்.

"என்ன பேசாமல், கிடக்கிறீர்கள்? நான் சொன்ன, சாறி எங்கே—?

இந்த வெறும் விடயங்களிலேயே உழன்று சலித்துப் போக விரும்பாத அவர் பண்பட்ட மனதின் உறுதிக்கு' அவள் கேட்ட அந்தக் கேள்வி, ஒரு சவாலாகவே மூளைத் தது. அந்தச் சவாலுக்கு ஈடு கொடுத்துத் தப்பித்துக் கொள்ள விரும்பும், தமது உண்மை நிலையைச் சிந்தித்த வாறே, பொய்யில் தூங்குவது போல, வெகுநேரமாக அவர் இருப்பதையே மறந்து விட்டு, மரத்துக்கிடந் தார். பிறகு தமது சகஜநிலையை உணர்ந் தவராய், அவளை மனைவியென்று ஏற்றுக் கொண்டுவிட்ட கடமையை மறவாமல்



அதற்கு உடன் பாடாகத்தான் மாறுவது எவ்வளவு தூரம் சரிப்பட்டுவரும் என்பதை நினைத்து, மனங் கலங்கியவாறே

குழம்பி வெறித்த கண்களைத் திறக்க, அவளை இயல்பாகப் பார்க்காதபோது ஏதோ ஒன்று குடைசாய்ந்துவிட்டாற் போலிருந்தது. உண்மையைக்கூறி, அவளைக் குழப்பவிரும் பாமல், துக்கம் தோய்ந்து, உருண்டுபோன குரலிலே மெல்ல அவர் சொன்னார்.

"நானும் ஏறிப்பார்க்காத கடைகளில்லை. நீ குறிப்பிட்ட சாரி, எங்குமே கிடைக்கவில்லை. அடுத்த தடவை போற போது, நீயே வேண்டுமானால், வந்து பார்.

"சரி இப்ப அதுக்கென்ன என்ரை காசைத் தாங்கோ..."

"அதுவும் செலவழிந்துபோயிற்று. சம்பளம் எடுத்த வுடன், திருப்பித்தாறனே."

அவள் அவரை நம்பமுடியாமல், ஒரு புதிய, கறைபட்ட கோணத்தில், இலக்கு வைத்துப் பார்ப்பதுபோல, மனம் குழம்பித் திடுக்கிட்டவாறு, அவரை வெறித்தாள். பிறகு முன் யோசனையற்ற தனது சுபாவப்படி அவரை நேரா கவே, மனம் கூசாமல் கேட்டாள்.

"எனக்குத் தெரியாமல், அப்படியென்ன செலவு உங்க ளுக்கு?"

"எவ்வளவோ இருக்கும். எல்லாம் உனக்கு அவசியமா?"

"ஓ! அதுசரிதான் நீங்கள் ஆம்பிளை. இஷ்டத்துக்கு எவ்வளவோ, செய்யமுடியும். உங்கடை அந்தரங்கத்தில் குறுக்கிட நான் யார்? பரஸ்பரம் உங்களை அறிந்துகொண் டாலும், இந்த விடயத்தில், நீங்கள் பலவீனமாக இல்லை என்று எப்படி நம்புவது.

மேரி, கேவலம் ஒரு புடவைக்காகத் தம்மை இப்படித் தவறாக எடை போட்டுப் பேசுவாள் என்று அவர் எதிர்பார்க் கவேயில்லை. அவள் உண்மையை அறிந்துகொண்டால், எப் படி நடப்பாள்? மூர்த்தியைத் திட்டியே எரித்துவிடுவாள். அந்தச் சாபத்திலிருந்து அவனைக்காப்பாற்றி. மன்னித்து ஏற்றுக்கொள்ளும் பெருந்தன்மையினாலேயே, அவர் தம்மை இப்படி பலி கொடுக்கத் துணிந்தார்.

இப்போது மேரி கூறிவிட்ட பொய்யான பழியை ஏற்க முடியாமல் மனம் குமுறிய அவர், திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தவாறே ஊனத்தில் கடவுளைத் தேடுகிற மாதிரிச் சிவந்து கலங்கிப்போயிருந்த விழிகளை உயர்த்தி, எங்கேயோ வெறிக்கப்பார்த்துக்கொண்டிருந்தார். அவரால் பேசவே முடியவில்லை, மூர்த்தியின் செய்கையை நினைத்து நினைத்து அவர் தமக்குள்ளேயே புலம்பினுர்.

"மூர்த்தி! உன்னுல்தான் இவ்வளவும். உன்னை நான் எவ்வளவு நம்பினேன். நீயொரு மேலான இளைஞனென்றல்லவா நினைத்தேன். ஆனுல் நீ ஒரு பகற்கொள்ளைக்காரனுகவல்லவா நடந்துகொண்டிருக்கிருய் உன்னுல் அபகரிக்கப்பட்டபணம் இனித்திரும்பிவரப்போவதில்லை. கடவுள் உன்னை மன்னிக்கவேண்டுமென்றுதான் நான் விரும்பினேன். அதற்காகவே உன்னைக் காட்டிக்கொடுக்க நான் விரும்பலே இது எப்படி போய், முடிந்திருக்கிறது என்று பார்த்தாயா? என் வாழ்க்கைக்கே இது—— இப்படி மன்னிப்பது, பாவங்களை, பொறுத்துக்கொண்டிருப்பது, எல்லாமே உலை வைத்துவிடும் போலிருக்கு. இப்ப எனக்கு எது முக்கியம்!

மனைவியா? இந்த அன்புவழிபாடா?

மேரி கட்டில் விளிம்பிலே. முகம் புதைத்துக்கொண்டு விம்மினுள். அந்த அழுகையிலே கரைந்துபோகும், சிறு துரும்புபோலாகிவிட்டிருந்த அவருக்கு, நெஞ்செல்லாம் கரித்தது உண்மையைச்சொல்லிவிடவே இப்போது அவர் விரும்பினுர். அதுமட்டுமல்ல, தன்னை இப்படி ஒரு விபரீத நிலைமைக்கு ஆளாக்கி, வஞ்சித்துவிட்டுப்போன மூர்த்தியைச் சும்மா விடுவதே பாவம் என்று அவர் நினைத்தார். அவனை எப்படியும் பழிவாங்கியே தீரவேண்டும் என்று நினைத்தவாறே தொண்டையைச் செருமிக்கொண்டு, மேரியின் முகத்தை நிமிர்த்தி, அதனையே சத்தியதரிசனம் காண்பதுபோன்ற, மெய்யான மயக்கத்திலே தம்மை மறந்து கற்பனையில் பேசுகிறமாதிரி, அவர் அவளின் முகத்தை பார்த்துக்கொண்டே சொன்னுர்.

"மேரி என்னை மன்னித்துவிடு. ஒர் இளைஞனை நம்பி நான் ஏமாந்து போனேன். அவன் நல்லவனுகவே நடித்து

என் பணத்தை அபகரித்துக்கொண்டு போய்விட்டான். அவனின் அப்பாவை எனக்குநன்ருகத் தெரியும். அவர் ஓர் உத்தமர். அதனுல் தான், இந்த விடயத்தை நான் மறைத்துவிடலாமென்று பார்த்தேன். ஆனுல் நீயோ என்னை வேறு விதமாகப் பார்க்கிருய். நீ மட்டுமே என் அன்புக் குரியவள். உன் மனதில், இதைப்பற்றி, இப்படியொருகறை விழுந்திருக்கவே கூடாது. நான் அவனை நேசித்ததனுல், ஏற்பட்ட தவறு இது,

உனது மனதில், என் நினைவு ஊடுருவி உறங்காமல், நித்திய சிரசீஞ்வியாக வாழ்ந்து உயரும் பெருமை எனக்குத் தேவையில்லை. எவன் என் முகத்தில் கரிபூசிஞனே, அவனை என்ன செய்கிறேன் பார்.

அவன் முகம், அவளுக்குப் புரிந்த ஒரு கோணத்தில் புடம் பெற்று எழுவது போல், அப்படித்தான் தோன்றினுலும், ஜீவனற்று வரண்டு போன அவரின் ஆசை மனம், உண்மையில் இருண்டுதான் கிடந்தது. மேரி அவரின் கையைப் பற்றிக் கண்களில் ஒற்றிக்கொண்டாள். அதிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள முடியாமல் அவர் ஒரு சிறைக் கைதி போல, அறைக்குள்ளேயே, இருண்டும் வெறிச்சோடிப்போன மனத்துடன், வெகு நேரமாக அடைந்து கிடந்தான்.

மறுநாள் காலை எட்டு மணிக்கு, மேரியின் காலடியில் ஒரு சிறைக்கைதிபோலாகியிருந்த டேவிட், மூர்த்தியின் வீட்டைத் தேடிக் கண்டுபிடித்தார்.

அன்றைக்கு லீவு நாளானதால், அதிபர் ஆறுமுகம் வீட்டிலேயே இருந்தார்; மகள் புவனு வாசலில் டேவிட் வருவதைப் பார்த்துவிட்டுத் தயங்கி நின்ருள்.

நான் அதிபரைப் பார்க்க வந்திருக்கிறேன் என்று கூறித் தொடர முடியாமல் நின்ற அவரை, ஒரு விருந்தினராக நம்பி வாய் மலர்ந்த வார்த்தைகளால் அவரை உபசரித்து, உள்ளே அழைத்துப் போனுள் அவள்.

அதிபர் ஆறுமுகத்தின் அறைவாசலைக் கடந்து, அவர் உள்ளே போன போது, மேசையில் இருந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்த ஆறுமுகம் தலையை நிமிர்த்திப் பார்த்தார் தம் முன்னுல் வந்து நிற்கும் அப்புதிய மனிதன் மீது, எவ்விதக் கண்ணேட்டமுமின்றி, இயல்பாகவே முகத்தில் மலர்ந்து ஒளி வீசும் புன்னகையோடு, அவரை வரவேற்ருர்.

அவருக்கு முன்னுல், மேசைக்குச் சிறிது தூரம் தள்ளி ஜன்னலை ஒட்டினுற் போல, உட்கார்ந்து கொண்டு டேவிட்

திரையில் விழும் வெறும் நிழல்களையே, பார்த்துக் கொண்டிருந்தார். அவற்றுக்கு மேலாக வந்து விழும் ஆறுமுகத்தின் கம்பீரமான அறிவுக்கனை ஒளியால் ஒரு நேர் அம்பு பட்டாற் போன்று அவருக்குக் கண் கூசியது. எனினும் ஒரு சவாலுக்குத் துணிந்துவிட்ட வெறியில், அவர் முகம் நிமிர்த்தி அதிபரைப் பார்க்கவே செய்தார். இதுபோன்ற பார்வையின் கனத்தையே மனதில் ஏற்றுப் பழகிக் கொண்டு விட்ட அதிபருக்கு இந்த டேவிட்டும் புதியவராகவே தோன்றவில்லை. ஏதோ தொந்தரவு இருக்கிறது என எண்ணி,

"என்ன விடயம்......? என்ருர்.

"நான் உங்களுடைய பழைய நண்பன் டேவிட். இதைச் சொல்லிக்கொள்வதில் மட்டும் தான் எனக்குப் பெருமை. நீங்கள் என்னை மறந்து போயிருக்கலாம், ஆனல் உங்களோடு பழகியதால், எனக்குக் கிடைத்த அனுபவம், பெருமை இருக்கே - இந்தப் பாடங்களை வைத்துக்கொண்டே வாழ்க்கையை ஜெயித்து விடலாம். என்னை இதுக்குத் தகுதியுள்ளவனுக ஆக்க முடியாமல் உங்களது நிழல், இப்ப வழிமறித்துக் கொண்டிருக்கு. இதைச் சொல்லிப் போகவே வந்தேன்.

தன்னில் கிளைவிட்டுப் பிரிந்து, கேடு விளைவித்துவிட்டுப் போன அந்த நிழல் எது, ... என்று புரியாமல், ஆறுமுகம் மனம் குழம்பியவாறே டேவிட்டை, வெறித்தார்.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்...?
மூர்த்தி உங்கள் மகன் தானே...?

இதைக்கேட்கிறபோது, டேவிட் தன் வசம் இல்லை. அங்கே மேரி அவரைக் காறி உமிழ்ந்து கொண்டிருக்கிருள். அவளுக்கு, இதைப் புடம் போட்டுக் காட்டவேண்டும். மூர்த்தி நெஞ்சை எப்படிக் கிழிக்கிறேன் பார். ...

அவன் என்ன செய்தான் என்று யாருக்குத் தெரியும். அவனை அறிய அப்படியொன்றும் இவர்கள் எல்லாம் அறிந்த பிரம்ம சொரூபங்களல்ல.

நான் போட்டு முளைக்க வைத்த வித்து, அது காட்டு மரமாக இருந்தாலும் சரி. அதை மறைக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை. நான் இந்தப் பூமியோடு ஒட்டாத கழன்று போகிற ஒரு தனிவிருட்சம். நிழலைக் கொடுப்பதற்கென்றே பிறந்தவன். நிழலிலே புரையோடினுல், நான் என்ன செய்ய முடியும்?

அவர் குரலைக் கனமாக்கிக் கொண்டு சொன்னுர்.

"ஓம்! அவன் என்ரை மகன்தான்.

" அவனுக்கு நீங்கள் சவுக்கடி கொடுப்பதில்லையா?

அவர் இந்தக் கேள்வியின் சூடு பொறுக்கமாட்டாமல், மனம் பதறித்துடிதுடிக்க மௌனமாகத் தமக்குள்ளே. புலம்பினுர்.

"நீதி என்ரை கடவுள், பக்கச் சார்பாகவோ, உறவை நினைத்துக் கொண்டோ, நான் தர்மத்தைக் கைவிடுவதில்லே. எல்லோருக்கும், பொதுவாகவே, என்ரை சிந்தனையின் தர்ம வெளிச்சம். நான் யாருக்காக வேதம் சொல்கிறேன். என்ரை பிள்ளை இதில் விதிவிலக்கோ? ...

இல்லே அப்படி யென்றால் பூமி என்னை விழுங்கியிருக்குமே. நான் விருட்சம். இதிலே முளைத்த ஒரு வித்து... என் மகன், அழிந்து கெட்டுப்போனானென்றால், நான் எப்படி நம்புவேன்? இவர் என்ன சொல்கிறார்?

" நான் உண்மையைச் சொல்லி விடுறன். உங்கள் மகன் ஒரு பகற் கொள்ளைக்காரன். நான் அவனைநம்பி, மோசம் போய் விட்டேன், எனது ஐநூறு ரூபா பணத்தை, அவன் திருடி விட்டானே. இன்றைக்கு ஐநூறு எடுத்தவன்; நாளைக்கு ஆயிரமாகத் தொடருவான். அவனை நீங்கள் கண்டிக்கவேண்டும்.

" நான் இதை எதிர்பார்க்கேலே. நான் நன்றாக வரும் என்று போட்ட ஒரு வித்து,அது புரையோடிப்போனது உண்மையாகும், நான் என்னையே நெருப்பில் இட்டு, எரித்து விடுறன். அவன் வரட்டும். இது எனக்கும், அவனுக்குமிடையில் நடக்கப் போற, ஓர் உச்சக்கட்டத் தர்மப் போர். உண்மை எனக்கு இன்னும் விளங்கேலே. ஒரு மயக்கமாக இருக்கு சீக்கிரமே இதில் உங்களுக்கு ஒரு நீதிகிடைக்கும். என் மகன் மீது, நீங்கள் போட்ட இந்தப் பழிக்காக என்னையும் அவனையும் ஒன்றாகச் சேர்த்து, நெருப்பில் இட்டுப் புடம் வைத்துப் பார்க்கத்தான் போறன். அவன் வரட்டும்

அதிபர் உணர்ச்சி சூடேறித் தம்மை மறந்து பேசி முடிந்ததும், டேவிட் மனம் குளிர்ந்து, பழி வாங்கி, வஞ்சம், தீர்த்துக் கொண்ட அற்ப சந்தோஷத்தோடு, போக எழுந்து நின்றபோது. மனம் எதிலேயோ, வேர்விட்டுக் கழன்று போன மாதிரி, அதிபரின் துல்லியமான ஒளியிலிருந்து பிரிந்து நிற்கிற தமது வெறுமை, அவருக்கு வேதனையாகவே இருந்தது. அதை மறப்பதற்குத்தான் மேரி இருக்கிறாளே என்று நினைத்தவாறு, அந்த ஒற்றை இருளில் கால்கள் போனவழியே, தம்மை மறந்து. அதிபரிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல், அவர் புறப்பட்டுப் போனது ஒரு விந்தையல்ல.

# மௌனங்கள் கலையும்போது.... 3

[ வளலை வளவன் ]

மூஞ்சூறு கவ்விய நாகம் போல அதிபர் ஆறுமுகம் துடித்துக் கொண்டிருந்தார். ஒருபுறம் நாளை நடக்க விருக்கும் மகனின் பிறந்தநாள் கொண்டாட்டம், மறுபுறம் டேவிற்றால் தொடுக்கப்பட்டுவிட்ட குற்றப்பத்திரிகையின் அனல் வீச்சு! இரண்டுக்கும் நடுவே அதிபர் ஆறுமுகம் வெந்து வேக்காளப்பட்டுத் தூண்டல் மீனாகித் துடித்துக் கொண்டிருந்தார்.

ஒவ்வொரு பெற்றாரும் தனது பிள்ளைகளின் திறமைகளை அல்லது வீரதீரச் செயல்களைப் பிறர்வாயால் சொல்லித் தாம் கேட்கும் போதுதான் தமது பிள்ளைகளைப் பெற்றுவிட்டதற்கான உண்மை இன்பத்தை அடைகின்றனர், ஆனால் அப்படியான எதிர்பார்ப்புகளுக்கு எதிரான ஒரு நிகழ்வை அல்லது சம்பவத்தை கேட்க நேர்ந்துவிட்டால்...... பெற்றமனங்கள் படுந்துயரத்தினை அளந்து விட இந்த உலகில் எவராலுமே, அல்லது எந்தக் கருவியாலுமே முடியாது.

தனக்குள்ளே கெம்பி எரிந்த ஒரு எரிமலையை அதிபர் எப்படித்தான் அடக்கிக் கொண்டாலும் அதன் பிரதிபலிப்புகள் வெளிவீசத்தான் செய்தது. முகமெல்லாம் வியர்வைத் துளிகள் மாலை வானத்தில் அங்கொன்று மிங்கொன்றுமாகத் தோன்றும் நட்சத்திரங்களாக அரும்பி அந்திவானை நிரப்பிய தாரகைக் கூட்டமாக மொய்த்து ஆயிரம் முகாரிபாடி அழுது வடிந்தன தலைசற்றுக் கலைத்தது. என்ன செய்வதென்று தெரியாத தவிப்பில் சிக்கிச் சீரழிந்த அதிபர் ஒருமுறை தனது கைகளால் முகத்தைத் துடைத்துக்கொண்டார்.



முகம் வியர்வையால் நனைந்து ஈரலிப்பாக இருந்த போதும் அவரது உள்ளம் என்னவோ அனலாய்க் கொதித்துக்கொண்டேயிருந்தது.

"உங்கள் மகன் ஒரு பகற்கொள்ளைக்காரன்".

"எனது ஐநூறு ரூபா பணத்தை அவன் திருடிவிட்டானே"

"இன்றைக்கு ஐநூறு எடுத்தவன் நாளைக்கு ஆயிரமாகத் தொடருவான்",

ஒன்றன்பின் ஒன்ருக எழுந்த டேவிற்றின் அந்த வார்த்தைகள் அதிபரின் முன் உருப்பெற்றெழுவது போல மீண்டும் மீண்டும் எதிர் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

மூர்த்தியைத் தண்டித்துத் தனக்கு அவன் செய்துவிட்ட கொடுமைக்குப் பழிக்குப் பழிவாங்கத் துடித்துக் கொண்டிருந்த டேவிற்றின் செயல் மூர்த்தியைப் பழிவாங்குவதற்கு முன் ஒன்றுமே அறியாத ஒரு தூய உள்ளத்தைப் பழிவாங்கிவிட்டதை டேவிற் என்ன அறியவா போகிருன். இப்போது அவன் மூர்த்தியைத்தான் பழிவாங்கி விட்டதாக நினைத்து மனைவி மேரியோடு கொட்டமடித்துக் கொண்டிருப்பான் என்பதைத்தான் அதிபர் அறிவாரா என்ன?

எல்லாமிழந்த இராவணனின் நிலையில் இருக்கும் அதிபருக்கு டேவிற்றைப் பற்றியோ அவனின் மனே நிலையைப் பற்றியோ எண்ணிக் கொள்ள இதயம் இடந்தருமா என்ன? பாவம் அதிபர் அன்றைய பொழுது தனக்குள்ளேயே ஒரு நிழல் யுத்தத்தை நடத்திக் கொண்டே படுக்கையில் வீழ்ந்தார்.

என்மகன் அப்படிச் செய்திருப்பானு?.. நான் கொடுத்த பணம் அப்படியே இங்கிருக்கும்போது அவன் இவ்வளவு சாமான்களோடும் மிச்சப் பணத்தோடும் வந்தானே... அப்படியவன் திருடியிருக்காது விட்டால் இந்தப் பணம் எப்படி அவனுக்குக் கிடைத்திருக்க முடியுமென்ற கேள்வி அதிபரின் மனதில் தொக்கி நின்றது. மூர்த்தியின் ஹப்பி பேர்த்டே ரூயூ இசையோடு காலைக் கமலமாகப் புவனு ஒளிவீசிக்கொண்டிருந்தாள். தோழியர் தோழர்கள் கூட ஒரே அமர்க்களம்தான். எல்லோரது வாழ்த்துக்களையும் ஏற்றுக்கொண்டு அவர்களோடு கைகுலுக்கிப் பரிமாறுவதில் புவனு பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தாள்.

ஹப்பி பேர்த்டே... விஸ்யூ ஒல்த பெஸ்ற், என்றவாறு வந்த பிரியாவைக் கட்டிப் பிடித்து அணைத்துக் கொண்ட புவனு "அண்ணு இவளைத் தெரியுமா? என்று கேட்கவும்... இவரா... எடியே... இந்த மூர்த்தி உன் அண்ணனுடி... என்று தான் மூர்த்திக்குப் புதியவளல்ல என்பதை நினைவூட்டி நிறுத்தினுள் பிரியா.

ஏன் பிரியா அண்ணு வரவில்லையா? என்ருன் மூர்த்தி.

அண்ணனு உனக்கும் ஒரு அண்ணன் இருக்கிருரென்று எனக்குச் சொல்லவேயில்லை என்ருள் புவனு.

அங்கே நின்றிருந்த அத்தனை பேரின் விழிகளும் மூர்த்தியையும் பிரியாவையுமே மாறி மாறி மொய்த்துக் கொண்டிருந்தன.

தனது பள்ளிக்கூடத்தில் தன்னிடம் படித்த பல மாணவிகளையும் ஒன்ருய்க் கண்டதில் அதிபருக்கு ஏதோ ஒரு இனம் புரியாத மகிழ்ச்சி ஏற்படத்தான் செய்தது. சென்ற ஆண்டு இறுதித் தேர்வுப் பரீட்சைக்கு வந்தபோது கண்டதற்கு அவர்களை அன்றுதான் ஒத்தபடி எல்லோரையும் காணமுடிந்தது. அதிபருக்கு அந்தச் சந்தர்ப்பத்தை விட்டால் இனிமேலும் காணக்கூடிய வாய்ப்பு எங்கு எப்போது வரப்போகுதோ என்ற எண்ணத்தோடு அதிபர் தனித்தும் ஒருமித்தும் அவர்களோடு பலவாறு பேசிக் கொள்ளத் தவறவில்லை.

எல்லாத் தோழியரும் ஒன்று கூடிவிட்ட மகிழ்வில் இடைப்பட்ட காலத்துச் சம்பவங்களையும் அநுபவங்களையும் எல்லோருமாகப் பகிர்ந்து கொண்டனர். பள்ளிக்கூட வாழ்க்கைதான் உண்மையிலேயே மாணவ வாழ்வின் வசந்த காலம் என்பதும், அதை இனிமேல் மீட்டிப் பார்க்கலாமேயன்றி அடையமுடியாதென்பதை ஒவ்வொருவரும் உணர்ந்தவாறு பேசிக்கொண்டிருந்தனர்.

பிரியா மட்டும் புவனுவைத் தனிமையில் அழைத்து ஏதேதோ பேசிக்கொண்டிருந்ததை அவளின் அபிநயம் நிறைந்த பேச்சுத் துலாம்பரப் படுத்திக் கொண்டேயிருந்தது.

நாளை மறுதினம் அண்ணு யேர்மனுக்குப் போகவேணுமாம் அது தான் இன்று மாலையே கொழும்பிற்குப் போவதற்கு எல்லா ஆயத்தங்களும் செய்கிருரடி. இன்று மதிய உணவு நானெப்படியும் அண்ணுவோடு தான் சாப்பிட வேணும். இனி எத்தனை வருடத்தின் பிறகுதானே இந்தச் சந்தர்ப்பம் வரும். நான் உன்னோடை அடுத்த பேர்த்டேக்கும் சாப்பிடலாம் அல்லது இடையிலும் வந்து சாப்பிட்டால் போச்சு என்று ஆலாய்ப் பறந்து நிறுத்தினுள் பிரியா.

நீ அண்ணனை அனுப்புற புழுகிலை என்னை விட்டிட்டுப் போகவாடி பார்க்கிருய். சரி சரி போ... ஆனுல் ஒன்று அண்ண

ளைச் சோடி சேர்க்காமல் இருக்கச் சொல்லிவையடி என்ருள் புவனு.

ஏன்டி நீ பிடிக்கப் பாக்கிறியாடி கள்ளி… எனக்குத் தெரியாமல் அப்படியொன்றும் செய்திடாதே. என்று பிரியாவும் கேலி செய்து ஒருவரை யொருவர் தள்ளிக் கொண்டு நின்ற போது தந்திக்காரனின் பெல் ஒலி பலமாகக் கேட்டது.

யாரோ தந்தியிலை வாழ்த்தனுப்பியிருக்கிருளாக்கும், என்று இழுத்தாள் பிரியா.

புவனு துள்ளுப் பாய்ச்சலில் தந்தியோடு திரும்பினுள் தங்கையின் கையில் தந்தியைக் கண்டதும் மூர்த்தியின் மனம் எங்கெல்லாமோ பறந்தது.

மூர்த்தியின் நினைவுகள் தந்தியைத் தொட்டுக் கொழும்பிலிருந்து விமானத்திலேறி வெளிநாடுகளை மேயத் தொடங்கியது. மூர்த்தி எதையோ பலமாக யோசிப்பதைப் பிரியா கண்கொட்டாமல் பார்த்து ரசித்தாள் அந்தப் பார்வையில் தான் எத்தனை நளினம்; எத்துணை வாவண்யம். பலரைத் திசை மாற்றிய பிரியாவின் பார்வையைத் திசை மாற்றுவது போல அண்ணு "ஹப்பி நியூஸ் ரியூஸ்டே பிளைட் கம் இமீடியற்லி," என்று தந்தி அடிச் சிருக்காங்கள் என்ருள் புவனு. முகமெல்லாம் பல்லாகப் புவனு எல்லாத் தோழியரையும் கட்டிக் கட்டி மகிழ்ந்தாள். அணைகடந்த வெள்ளம் போன்ற அந்த ஆனந்த மேலீட்டைக் கண்ட அதிபரோ திணறிப்போனுர்.

எத்தனைபேர் முற்பணமாக காசை வட்டிக்கெடுத்துக்கட்டி ஏமாந்து இன்று வரை காசைக்கூட திரும்ப வாங்கிக் கொள்ள முடியாமல் தவிக்கிருங்கள், இவனுக்கு அப்படி யென்ன அதிஸ்டமோ. காசு, கட்ட முதலே தந்தி கொடுத்திட்டாங்கள், வந்த வெள்ளம் நிண்ட வெள்ளத்தைக் கொண்டுபோன கதைதானே அல்லது.. அதிபரின் மனம் அதீத போர்க்களமாக மாறியது

கொழும்புக்குப் போய் ஐநூறு ரூபாய்க்குப் பூசிய கரியைத் துடைக்க வழி தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும்போது இது வேறை ஆயிரக் கணக்கிலை என்ரை தலையைத்தான் கொண்டு போகுமோ? டேவிட் வந்து உடுப்பையும் சாயத்தையும் வாங்கினது போதாதெண்டு என்ரை உயிருக்குத்தான் இது

வழிதேடுதோ... யார் கண்டது. ஏதோ நடக்கிறது நடக்கட்டும், இப்ப எதையாவது கேட்டு அவனைக் கெடுக்கப்படாது. என்ற சிந்தனை ஊன்றப் பட்டவராகக் காணப்பட்டார்.

மூர்த் தி தந்தியை புவனாவிடம் வாங்கிக் கொண்டு அப்பாவை நாடினான்.

மகனை அப்படியே பார்த்துக் கொண்ட அதிபர் அவனுள்ளத்தைச் சல்லடை போட்டுத் துளைத்து எதையோ தேடினார் அவரின் தேடலில் ஐநூறு ரூபாதான் எங்குமே தட்டுப்பட்டுக் கொண்டு நின்றது. இவனைக் கண்டித்துத் திருத்தாமல் விட்டால்... டேவிற் சொன்னது போல் ஆயிரமாயிரமாக... ஆனால் தருணம் கண்டிக்கக் கூடியதாக இல்லையே... என்ன செய்வது என்று மனதைக்குழப்பிக் கொள்ள...

அப்பா... எப்படியும் இன்றைக்குப் புறப்பட்டால் தான் நாளைக்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்து.... இழுத்து நிறுத்தினான்.

ம்.... சரிதான் நீ ஆயத்தப்படுத்து.... என்றுவிட்டு சோபாவைவிட்டு எழுந்து உள்ளே சென்று மறைந்தார்.

பிரியா புவனாவையும் மூர்த்தியையும் பிரிந்து சென்றாள். பிரியாவை வெளியே வீதிவரை கூட்டிச்சென்று வழியனுப்பி விட்டு வந்த மூர்த்தியைப் பார்த்துப் புவனாவின் தோழிகள் ஏதோ குசுகுசுக்கத் தவறவேயில்லை. அதிபரின் பெட்டிப்பாம்பாக இருந்த மூர்த்தி இப்படியெல்லாம் எப்படி மாறிப்போனானோ என்ற கேள்விகூடச் சிலரின் மனதில் இழையோட்டமாக எழத்தான் செய்தது.

இந்தச் சபலமான சந்தேகம் அதிபரைக்கூட விட்டுவைக்கவில்லை. எவ்வளவோ சிரமங்களைச் சுமந்து இவனை வெளிநாட்டுக்கு அனுப்பி நானும் ஒரு மனிசனாக நிமிரவேண்டுமென்று எத்தனையோ கோட்டை கட்டிக்கொண்டிருக்கும் என்னிடமிருந்து இவள். எங்கே இவனைப் பிரித்து விடுவாளோ என்று தன் மனதுள் அதிபரும் நச்சரித்துக் கொள்ளத் தவறவேயில்லை.

மனிதர்கள் தோற்றத்தில் என்னதான் ஒன்றாயிருந்தாலும் மனதால் ஒருமைப்படவில்லைத்தானே. அந்த ஒருமைமட்டும் மனிதனிடம் வந்துவிட்டால், இந்த உலகில் கவலைகளோ பிரச்சனைகளோ இருந்திருக்கவும் முடியாது. தோற்றுவாய் கொள்ள

வுல் இடமில்லையன்றே. என்ன செய்வது மனிதரின் துயரங்க ளெல்லாம் மனதினுல் வந்த ஒருவகை நோய்தான் போலும்.

அதிபர் ஆறுமுகம் நீண்ட சிந்தனையின்பின் ஏதோ ஒரு முடிவிற்கு வந்து விட்டார். என்னதான் அவனை இந்த நான்கு சுவர்களுக்குள் நான் வைத்திருந்தபோதும் ஏதோ ஒருவித மாற்றத்தை அவன் ஏற்படுத்திவிட்டானே என்ற ஒரு விழிப்பு புதியதொரு சிந்தனையாகப் பரிணமித்துப் பரிமாணமானது.

மூர்த்தியைப் பிரிந்து துயரப்படப்போகின்றேனே என்ற ஒரு பயம் மெல்ல மெல்ல அதிபரை ஆளுமைப்படுத்தியது. அந்தப் பிரிவின் வேதனையை நுகர்வதற்கு நானும் அவனோடு சென்று திரும்பினுல் எங்கே அது அதிகரித்துவிடுமோ என்று அவர் அஞ்சினுர்.

"எல்லோருமாகச் செல்வதும் தேவையற்ற செலவுதானே நீயே பஸ்ராண்ட் வரைக்கும் போய் அனுப்பிவிட்டு வா" என்னும் பாவனையில் மகள் புவனுவை மூர்த்தியோடு அனுப்பி வைத்தார் அதிபர்.

பிரிவுத்துயரை. எத்தனையோ இலக்கியங்களிற் படித்து அறிந்து வருந்திய காலங்களெல்லாம் இனி ஒன்ருகித் தன்னை யும் அந்தப் பெருந்துயர்ப் பீடையில் வீழ்த்தி விடுமோ என்ற ஒரு விபரீதமான அச்சம் அவரின் உள்ளத்தின் அடிமூலையில் மெல்ல அரும்பிக்கொண்டிருந்தது. சட்டம் பிரிவினை ஆதரிக் கின்றது, சத்தியமும் பிரிவை அரங்கேற்றியது. தர்மமும்கூட பிரிவினை ஆதரித்திருக்கிறது. ஆனுல் இவைகளுக்கெல்லாம் கட் டுப்பட மறுக்கும் மனங்களோ பிரிவை ஏற்பதில்லை. அது ஒரு வகைச் சுயநலம்தான். என்ருலும் சமயத்திலும் மனித மனங் கள் பிரிவால் தோல்வியடைத்தான் செய்கின்றன. இந்தத் தோல்விகளாலும் துயரங்களாலும்தான் இன்னும் பல காவியங் கள் உயிர்வாழ்கின்றன. அந்தக் காவிய வாழ்க்கையைக் காவி யத்தில் தரிசிக்கும்போது அது சுவைக்கக்கூடியதாகவோ படிப்பினைத் தரக்கூடியதாகவோ இருப்பதுபோல மனிதனின் நிஜவாழ்க்கையில் அதனை அநுபவிக்கும்போது அப்படியிருப்ப தில்லை, மாருக பிரிவின் தாக்கம் வேறு ஏதாவதொரு மாற்றம் தோற்றம் பெற ஏதுவாகியிருக்கின்றது. மூர்த்தியின் இந்தப் பிரிவு கூட ஒருவகைத் தோற்றுவாயாக அமைந்து விடுமோ ......என்ற அச்சம் அதிபரை மெல்ல மெல்ல அரவணைத்து அவரை மௌனியாக்கிக்கொள்ள புவனுவும் மூர்த்தியும் சென்ற திசையையே பார்த்தவாறு அப்படியே வாயிலில் நின்ருர் அதிபர்.

குற்றங்கள் திருத்தப்படவேண்டும் அல்லது தண்டிக்கப்பட வேண்டும் என்று பாடசாலை வாழ்க்கையில் அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்த அதிபருக்கு இன்று தனது மகனது குற்றத்தைத் தண்டிக்கவோ திருத்தவோ சந்தர்ப்பமில்லாது போகப் போகிறதே என்றதொரு பயமும் எழத்தான் செய்தது. கீறல் விழுந்த இசைத்தட்டுப்போல அதிபரின் மனமும் அந்த ஐநூறு ரூபா வால் விழுந்த கீறலிலேயே நிலைகுத்தி நின்றது.

பிரச்சனைகட்கு முடிவு காணுமலேயே இவன் என்னைப் பிரிந்து போகப்போகிருனே என்பதை எண்ணியபோது நெஞ்சில் ஏதோ ஒரு வலி எழுந்து அதிபரை வாட்டி எடுத்தது. துடித்துத் துடித்து அப்படியே அவர் அந்தச் சோர்வில் தன்னை மறந்து கிடந்தார்.

தோழியர் தோழர்கள் யாவரையும் அனுப்பி வைத்துவிட்டு புவனுவும் மூர்த்தியும் பிரயாணத்திற்கு வேண்டிய சகல ஆயத்தங்களோடும் தயாராகினர்.

மகளது கையில் சில ரூபா மதிப்புள்ள நோட்டுக்களைத் திணித்துவிட்டு அப்படியே சிலையாக நின்ருர் அதிபர். புவனுவின் கையில் கொடுத்தால்தான் மூர்த்திக்கு ராசியாக இருக்குமென்று ஒரு அபிப்பிராயம். இது அவர் புவனு பெரியவளானதிலிருந்து கடைப்பிடித்துவரும் ஒரு வாடிக்கையான பாடம்.

இதுவரை மனதில் குமைந்து குமைந்து அதிபரை ஆண்டு கனத்துக்கிடந்த மௌனம் வெடித்துச்சிதறிக்கலைந்துகொள்ள அவர் பலமாகச் சிரித்தார்; ஆனுல் மனச்சாட்சியின் சிரிப்பா அல்லது மனப்பேதமையின் அவலக்குரலா? எதுவுமே புரிந்து கொள்ள முடியாத நிலையில் பெட்டிப்பாம்பாக இதுவரை வாழ்ந்த மூர்த்தி என்னை விட்டுப் பிரியப்போவதையுணர்ந்துதான் இப்படியொரு கறையைப்பூசி என்னைப் பெட்டிப்பாம்பாக மாற்றிவிட்டுச் செல்கின்ருனே என்று அவர் முணு முணுத்தார்.

எங்கோ எதையோ வெறித்துப்பார்க்கிருர் அதிபர்.

அவரது மனதில் பெரும் பூகம்பம் ஒன்று வெடிந்துச்சிதறுகிறது. மூர்த்தி செய்துவிட்ட தவறின் வலுவைவிட அவனது பிரிவுத்துயரின் வலு அவரை வெகுவாகத் தாக்கியிருக்கவேண்டும்.

கணநேரம் தான்.......

அதிபர் ஆறுமுகம் தன் நெஞ்சைப் பொத்திப்பிடித்துப் பிசைந்தவாறு அப்படியே தசரதனை நினைவூட்டியவாறு நிலத்தில் சாய்ந்தார்.

# உன்னை பிரிகின்றேன்

இ. ஸ்ரலின் — உரும்பிராய்

உன்னை நான் பிரிகின்றேன்
பிரிவை விரும்புகின்றேன்
உன்னை ஆழமாகப் புரிய முடிவதனாலே,
கற்பனைகள் கலைந்து போகின்றன,
உணர்ச்சி மயக்கங்கள் தெளிவடைகின்றன,
சிந்தனையிலே தெளிவு பிறக்கின்றது.
உன் அன்பை இப்போது வெளிச்சத்தில் பார்க்கின்றேன்,
உன்னை ஒரு புதிய கோணத்தில் நோக்குகின்றேன்.
நீ எனக்கு ஒரு அற்புத பிறவியாகக் காட்சியளிக்கின்றாய்.
உன்னில் காணும் இனிய சுபாவத்தைப் பாராட்ட விரும்புகின்றேன்.
சொல்ல நினைத்து மறந்தவற்றை சொல்ல நினைக்கின்றேன்
உன் குறைகளையும் சரியாக எடைபோட்டுக் கொள்ளுகின்றேன்.
பிரிவில் நான் காணும் நன்மைகள் இவை.
ஆனால் உன்னோடு மீண்டும் இணைய ஆவல்.
அந்நியோன்னியமாகப் பேசி மகிழ வேட்கை.
அந்தரங்கத்தை பகிர்ந்துகொள்ள ஒரு ஏக்கம்.
உன்னோடு இணையும் நாளை எண்ணிக் கற்பனைகள்.
பிரிவில் நான் காணும் இனிமைகள் இவை.
பிரிவை எண்ணித் துவண்டு துன்பத்தில் வாழலாம்.
அன்றேல் அறிவுத் தெளிவு பெற்று,
நம் அன்பை சீர்தூக்கிப் பார்க்கலாம்.
தவறுகளைத் தவிர்க்க வழி தேடலாம்.
உறவை இனிமையாக்க வழி காணலாம்.
பிரிவிலே எதைச் செய்வது என்று நீ தீர்மானிக்க வேண்டும்.
பிரிவிலே துன்பமுண்டு; ஆனால் நன்மைகள் பல.
உன் அந்நியோன்னியத்தை எவ்வளவு விரும்புகின்றேனோ
அதேயளவிற்கு உன்னை விட்டுப் பிரிவதையும் விரும்புகின்றேன்.
இணைவதும் பிரிவதும் அன்புக்கு இனிமையூட்டுபவை.
நம் அன்புக்கு இரண்டும் அவசியம் என உணருகின்றேன்.
நீண்ட நாள் சேர்ந்து வாழ்வதிலே சலிப்புண்டு.
தொடர்பின்றிப் பிரிந்து வாழ்வதில் தவறுகளுமுண்டு,
இணைவதும் பிரிவதும் சக்கரமாக.
இது நம் அன்பின் கதையாக வேண்டும்.
நிரந்தரமான பிரிவையல்ல,
தற்காலிகமான பிரிவையே விரும்புகின்றேன்.
எனவே உன்னை விட்டுப் பிரிகின்றேன்.
உன் உறவை முறித்துக் கொள்ள அல்ல,
மீண்டும் உன்னில் இனிமையாய் இணைந்திடவே.

# மௌனங்கள் கலையும்போது ... 4

நிமா

தூரக்கிடந்த கற்பனைக் காட்சிகளில் இலயித்து விட்ட அவன் மனம் பக்கத்தில் தெரிந்த பசுமைக் காட்சிகளை மறந்து தான் விட்டது. "இப்ப அம்மா, அப்பா, புவனு என்ன செய்வார்கள். அப்பாவை டொக்டரிடம் திரும்பவும் கொண்டு போய் காட்டுவார்களோ... ம்... ஆண்துணை என்று அங்கு இனி யார் உள்ளார்கள். அப்பாவை பென்ஷன் எடுக்கச் சொன்னாலும் அந்த மனுசன் கடமை, சேவை என்றுகொண்டு ஊரார் கவலைகளையும் மனசில சேர்த்துக் கொண்டு ... இப்ப ... வருத்தம் தான் மிச்சம்." அவனையும் மீறி மனதில் ஒரு சலிப்புத் தட்டியது. அவற்றை... எல்லாவற்றையுமே மறந்து ஓர் புதிய உலகில் காலடி வைக்கப் போகின்ற கனவில் ஏராள எதிர்பார்ப்புக்களை மனதில் தேக்கியபடி கண்களை மூடினான்.

அந்த தனியார் பஸ்வண்டி கொழும்புக் கோட்டையை அடையும் போது அதிகாலை ஏழு மணியாகி விட்டது. அந்த அவசர உலகில் புதிய மனிதர்களை ஒழுங்காகச் சேர்த்து விட்ட திருப்தியில் பஸ்வண்டி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. பயணிகள் அவசர அவசரமாக தாங்கள் தங்குமிடங்களை நோக்கி விரைந்தனர். மூர்த்தி தனது பயணப் பொதிகளோடு மினி பஸ் வண்டிகள் நிற்கும் பக்கமாக நடந்தான்.



"ஹலோ! மச்சான்" முதுகில் தாக்கிய சொற்களின் சினேக பூர்வத்தால் ஆவலுடன் திரும்பினான். "ஹாய் ரமணா" அவன் பால்ய நண்பன் ரமணன் இவனின் பக்கமாக அவசர நடையுடன் பயணப் பொதிகளை சுமந்தபடி வந்தான். "என்ன மச்சான் இந்தப் பக்கம்?" ரமணன் கேட்டபோது "இன்டைக்கு எனக்கு ஜேர்மனுக்கு பிளேட்டடா." "அட எனக்கும்தான். உன்னைக்கண்டு சொல்லத்தான் எனக்கு நேரம் கிடைக்கவில்லை."

"பறவாயில்லை ரமணா! அதுதான் இப்ப கண்டுட்டம். முதல் ஏஜென்சி காரனைக் கண்டு கதைச்சு உடனேயே எக்ஸ் சேன்ச்காசு கட்டவேணும். பின்னேரம் பிளைட் என்றால் இப்பவே எல்லாம் பார்த்துச் செய்திட வேணும். அது சரி நீ வெளிக்கிட காசுப் பிரச்சனை எண்டியே என்னமாதிரி?"

"அது பெரிய கதை மூர்த்தி என்ர அக்காவின்ர சீதனக் காசெண்டு இருந்ததைக் கொண்டுதான் வெளிக்கிடுறன். அது நான் முழுசா உழைக்கிறது எப்ப, கலியாணம் நடக்கிறதுதான் எப்ப?"

ரமணனின் குடும்ப நிலை, பொறுப்புகளை நன்கு தெரிந்த தால் மூர்த்தியின் மனம் மிகவும் சங்கடப்பட்டது. "சரி என்னோடை வா மச்சான். எனக்குத் தெரிஞ்ச இடத்திலயே நிப்பம்."

இரு நண்பர்களும் தங்கள் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு அவசர நெரிசல்களில் பிதுங்கி எக்ஸ்சேஞ்ச் பணத் தைக் கட்டுவதற்காக அந்தப் பிரமாண்டமான கட்டிடத்துள் கியூவில் நிற்கும் சனங்களோடு நின்றனர். ரமணன் தன் வேளை வந்தபோது பணத்திற்காக பொக்கெற்றினுள் கையை விட்ட வன் பாம்பைத் தொட்டது போல் பதறினான்.

"என்ன ரமணா!" மூர்த்தியின் குரலில் உண்மையான பரிதவிப்பு.

"மச்சான்! காசைக் காணலை..." ஐயோ! நான் என்னடா செய்வன். ஒவ்வொரு சதமும் என்ர உயிர்டா. மூவாயிரம் ரூபாய்... சுளையா யாரோ எடுத்துப் போட்டாங்களே. கடவுளே... ஐயோ என்ர அக்கா... அம்மா... கடவுளே...' வெறும் புலம்பல்களாய் தொடங்கி கூக்குரலிட்டு அழும் அவனை வேடிக்கை பார்க்க ஒரு கும்பல் கூடியது. துடிதுடித்து பைத்தியக்காரனாய், "ஐயோ காசு..., ஐயோ காசு... போயிற்றுதே" என்று புலம்புபவனைக் காண மூர்த்தியின் வயிறு தீ மூட்டியது போல் தகிக்கலாயிற்று.

"அடப்பாவி யார் அதுக்குள்ள எடுத்திருப்பான். அவன் நல்லாயிருப்பானா.." "அவன் ஒரு மனுசனா?" "சீ ஏழையளுட்ட திருடி வயிறு வளர்த்திட்டு திரியிற நாய்கள்" வகைகயாய், வாரி வாரியாய் விழும் வசைகள் அவற்றை மிஞ்சி ரமணனின் கதறல்.

"ஐயோ... வயசையும் மறந்து ஓர் இளைஞன் இப்படிக் கதறுவதெண்டால் அவனுக்கு ஏற்பட்ட பாதிப்பின் அளவு எப்படியிருக்கும்". யாரோ ஒருவர் அனுதாபச் செய்தி தெரிவிக்கிறார்.

"பாவி... பாவி அவன் யாரோ, எவரோ இந்தக் கூட்டத்திலேயே நிற்கிறானோ..." மூர்த்தியின் மனம் பரிதவித்தது. ஆறுதல் சொல்லி அடக்கமாட்டாமல் துடிக்கும் ரமணனை இழுத்து சன நெரிசலில் இருந்து விலகி தனியிடம் சென்றான்.

"ரமணு! காச சரியா வைச்சனியா...?"

"ஐயோ இந்தக் கையால அந்தக் காசை குறைஞ்சது இருபது தடவையாவது எண்ணி இருப்பனே, எந்தப் பாவியோ எடுத்திட்டானே. அவனுக்குத் தெரியுமா? என்ர கஸ்டம். காசைக் கொண்டு போய் என்ன கூத்தடிக்கிருனே... இங்க நான் சாவைத் தவிர வேறு வழியில்லாமல் தவிக்கிறனே— பாவி... அவன் நல்லாவே இருப்பான். இல்ல— இல்லவேயில்லை..." ரமணன் மனம் வெதும்பியவனுக அலறியபடி மூர்த்தியின் தோள்களில் சாய்ந்தபோது மூர்த்தியின் மனம் என்னவோ அவன் வசமாயில்லை.

அந்த மனிதனுக்கும் ஏதும் அவசர தேவை இருந்திருக்குமோ...? அவனும் இப்படித்தான் கதறியிருப்பானே? முகம் தெரியா திருடனை நினைத்து அவதியுறும் இவனை விட அதிபர் ஆறுமுகத்தின் மகனை நினைத்து பெருமைப்பட்டு என்னை நம்பி பணப்பையை கொடுத்துச் சென்ற அந்த டேவிற் என்னவெல்லாம் எண்ணி இருப்பாரோ? அவன் மனம் இருளத்தொடங்கியது.

"ஆண்டவனே! எனக்கு மன்னிப்பே கிடையாது. நான் ஒரு பாவி இன்னெருவனின் மனசில நெருப்பை வார்த்துவிட்டு நான் குளிர் காய்ந்திருக்கிறேனு... சீ எனக்கு மனிதப்பிறவியும் ஒரு கேடா ? அவன் மனதில் தோன்றிய நினைவுகள் எல்லாம் கசப்பாக அடிமனதில் கிடந்த இனிமைகளை எல்லாம் மூழ்கடித்து விஸ்வரூபமாகி அவன் மனதில் வெறியாட்டம் போடத் தொடங்கியது. அந்தவெறி அவனுள் படிப்படியே எரிந்து அவனையே எரித்து புடம் போட்ட விந்தையை அவன் உணரவில்லை. அவன் மனம் அவன் தவறுக்காக இரங்கி பாவமன்னிப்பை யாசித்து அழுது கொண்டிருந்ததைத் தான் உணர முடிந்தது.

"ரமணு! இந்தாடா மூவாயிரம் இந்தக் காசை கட்டி நீ ஜேர்மனிக்குப் போ, உனக்கு வசதிப்படுகிற நேரம் காசத்தா... சரியா?... மச்சான் அழாதையடா— இங்க பார் உன்னை நம்பி உன் குடும்பமே நிற்குது. ஆனல், உன்னைப் போல பெரிய பொறுப்புகள் எனக்கு குறைவு தான்... சீ— என்னைப்பற்றி கவலைப்படாத... இந்தக் காசை வேறயாரிடமாவது மாறிப் பெற என்னல் முடியும் டேய்... என்னடா இது; காலைப் பிடித்துக் கொண்டு... உன்னைமாதிரி கர்மயோகியின் கைகள் என்னைப் போன்ற பாவியின் கால்களில் படக்கூடாதடா— இந்தா இத முதலில் போய் கட்டிட்டு வா... நான் உடன அப்பாவை பார்க்கவேணும், அவர் மடியில மணிக்கணக்கில அழுது ஒரு புண்ணிய யாகம் பண்ண வேணும்."

புயலாக வெளியேறும் மூர்த்தியை ரமணன் பார்த்த பார்வையில் அளவிட முடியா நன்றியுணர்வு இருந்தது. "மூர்த்தி — ஓ கடவுளே மனித உருவங்களாக நீ இன்னும் நடமாடிக் கொண்டுதான் இருக்கிருய் நன்றி அப்பா... நன்றி."

நண்பனை வழியனுப்பி விட்டு யாழ் செல்லும் தனியார் பஸ்சில் ஏறி இருந்த மூர்த்தியின் மனதில் இன்னும் அந்த உணர்

வுகள் அடங்கவில்லை. "ஓ... ஆண்டவனே இந்தக்கணமே இப்பொழுதே இந்தக் காற்றில் ஓர் தூசும்புதானும் இன்றி நான் கரைந்து விடக்கூடாதா. இவ்வளவு காலமும் நான் சேர்த்து வைத்த மனிதத்தன்மை, மதிப்பு, ஏன் என் தந்தையால் நான் கொண்ட கௌரவம் அவர் என்மேல் கொண்ட நம்பிக்கை அத்தனையுமே தூளாக்கி விட்டேனே. ஒருமகன் தந்தைக்கு ஆற்றும் கடன் இதுதானா...? தன்மேல் கொண்ட கழிவிரக்கத்தால் அவன் உடல் கூனிக் குறுகியது.

"ஆம்— அன்று என் தந்தை உனக்கு ஏது இவ்வளவு பணம் என்றபோது ஏதோ சாக்குப் போக்கு சொல்லி சமாளித்தேனே— சீ— ஏன் நான் உண்மையை சொல்லி இருக்கக் கூடாது. ஒரு நிஜ வாழ்வு வாழும் மனிதனின் வார்ப்பு ஏன் தடம் மாறியது. ஒரு நொடியில் உன் சுய ரூபமே வெளுத்து விட்டதே. ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டும் ஒரு உத்தமனின் மகனாக பிறந்தநான்" அவன் சிந்தனைகளை அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

"இந்தத் தடுமாற்றங்கள் எல்லாம் எதனால் வந்தது?" அவன் மனதில் அன்னாசிப்பழம், புத்தகம், பரிசுப் பொருள்கள் நிழலாடின. சீ மனிதத் தனத்தையே மறந்து மரத்துப்போய் விட்டேனே. உறவுகளின் மகிழ்ச்சியின் குளிர்வில் உறைந்துவிட எண்ணிய நினைவில் நான் ஒரு கேவலமான தொழிலுக்குத் தள்ளப்பட்டேனா? என் மனதை புடம் போட விதி செய்த சதியா? அல்லது எனக்குள்ளே ஒளிந்து கிடந்த அரக்கனை இனம் காட்ட வந்த வழியா?" கேள்விகள் அங்கு அவனை புதியவனாக உருவார்த்தெடுத்ததை அவன் உணரவில்லை. இன்னும் அவன் உணரவில்லை. இன்னும் அவன் தனக்காக இரங்கிக் கொண்டிருந்தான்.

"அப்பா உங்களுக்கு என்செயல் தெரிந்து விடப் போகிறதே என்று கவலைப்படவில்லை. இப்படி ஒருநிலைக்கு தாழ்ந்து விடச் செய்தேனே என்று கலங்குகிறேன். என் உருவில் உங்களைக் கண்டு பெருமைப்பட்ட அந்த டேவிற் என்ன நினைப்பார்.... எது வானாலும் சரி என் தவறுக்கான தண்டனையை நான் அனுபவிக்க வேண்டும்..." அவனுள் மூண்ட சத்திய வெறி அவனையே ஒரு யாக குண்டமாக்கி அவன் மனதில் நெய்யை வார்த்துக் கொண்டிருந்தது. சுற்றம் சூழல் அத்தனையும் மறந்த மௌனத்தவத்தில் அவன் மூழ்கிக் கிடந்தான். கண நேரத் தடுமாற்றங்கள் சில நல்ல உள்ளங்களில் விஷவித்துக்களை நாட்டி விட்ட கொடுமையில் தானோ என்னவோ இரவுகூட அவனுக்காய் அழுதது போல் மழைத்துளிகள் ஆங்காங்கே சிலிர்த்துக் கொட்டலாயிற்று.

# மௌனங்கள் கலையும்போது ... 5

## — ஜனக மகள் சிவஞானம் —

யாழ் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் தன் போக்கில் சென்று கொண்டிருக்க மூர்த்தி மட்டும் மன அமைதியின்றித் தவித்தவாறு இருந்தான். பஸ்ஸில் இருந்த பலரும் தூங்கி வழிந்து கொண்டிருந்தனர். "நானா? நானா? இப்படி ஒரு இழி நிலைக்குத் தள்ளப்பட்டேன் தெய்வமே!" "சிறுவயது முதற் கொண்டு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற ஒரு எல்லைக்குள் வளர்ந்த, வளர்க்கப்பட்டா நானா?" "சிறுபராயத்தில், பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்த வேளையில், ஒருநாள் என் புத்தகப் பையில் இன்னொருவனுடைய பென்சில் இருக்கக் கண்ட அம்மா. "டே! மூர்த்தி ஆற்றை பென்சிலடா இது? தெரியாமலேடா எடுத்துக் கொண்டு வந்தனீ. அப்பாவுக்குத் தெரிஞ்சால் உன்னோடை சேத்து என்னையும் துலைச்சுப் போடுவார். நாளைக்கு பென்சிலை உரியவனிட்டைக் குடுக்காமல் வீட்டை வந்தியோ? உன்ரை முதுகுத் தோலை உரிச்சு உப்புத் தடவிப் போடுவன்."

"பத்தாவுக்கேற்ற பத்தினியாய் அம்மா, அன்று தந்த போதனையைக் கூட நான் ஏன்? மறந்தேன், ம் ..... மனச்சாட்சியின் குரலுக்குப் பதிலை சொல்லத் தோன்றாதவனாய் தனக்குள்ளாய் தத்தளித்தான் மூர்த்தி.

செய்த குற்றத்திற்குத் தண்டனையாய் தன் பணத்தினையே ரமணனுக்கு விட்டுக் கொடுத்ததை, ஒரு மனம் சமாதானம் சொல்லிக் கொண்டது. அதனை அப்பாவிடம் ஒப்புவிக்கும் பொழுது நிச்சயம் அப்பாவின் மனது குளிர்ந்து போகும். நிச்சயம் மன்னிப்பார் என்ற நம்பிக்கை வித்து மெல்ல மெல்ல அவனுள் வேர்விட்டது.



"தவறு செய்வது மனித இயல்பு. ஆனபடியால் அதனை உணர்ந்து திருந்திவாழ நினைப்பவன்மன்னிக்கப்பட வேண்டியவன் என்று அவனப்பாவே பல தடவைகள் அவனுக்குப் போதித்திருக்கிறார். அவ்வழியில் தனக்கும் பாவமன்னிப்புக் கிடைக்கும் என்ற மன உறுதியோடு, சேட் பொக்கற்றிலிருந்த கைக்குட்டையினை எடுத்து முகத்தினை அழுந்தத் துடைத்து, மீண்டும் பொக்கற்றினுள் நுழைத்து விட்டுசீற்றில்நிமிர்ந்துஅமர்கிறான். வெளிநாடு போகாமல் திரும்பி விட்ட காரணத்தைக் கேட்டு,

அப்பா சந்தோஷமும், பெருமிதமும் கொண்டாலும், அம்மாவுக்கும் புவனுவுக்கும் இது மிகுந்த ஏமாற்றத்தையே அளிக்கும் என்பது மூர்த்திக்கு நன்கு புரிந்தது. "எக்ஸ்யூஸ்மி ப்ரதர். ப்ளீஸ் இப்ப என்ன நேரம் என்டு சொல்லுவீங்களா?" பக்கத்தி லிருந்தவரின் கேள்விக்கு மணிக்கட்டைப் பார்த்துப் பதிலைச் சொல்லிவிட்டு, மீண்டும் தனது சொந்தச் சிந்தனை வலைக்குள் மூர்த்தி நுழையமுற்படுகையில், பின்பும் பக்கத்திலி நந்தவரின் கேள்விக்கணைத் தொடுபபு. "நீர் எந்த ஊர்?" மனதிற்குள் எரிச்சலெரிச்சலாய் வந்தாலும். அதனை யும் பெரும் பாடுபட்டுத் தனக்குள் ஜீரணித்த மூர்த்தி அந்தக் கேள்விக்கும் பதில் இறுக்கிறான். இவன் பதிலில் பக்கத்திலிருந்தவரின் புருவம் உயர்வது மூர்த்திக்குத் தெரிகிறது என்ன காரணமாயிருக்குமெனத் தன் மனதிற்குள் விடை தேடிக் கண்டு பிடிப்பதற்கிடையில் பக்கத்தி லிருந்தவனே தொடர்கிறான். "உங்கடை ஊரிலே அதிபர் ஆறுமுகம் எண்டொரு கண்ணியமான மனுஷன் இருக்கிறார் தெரியுமே?"

கண்ணியம் என்ற வார்த்தை மூர்த்தியின் மனதைப் பலமாய்த் தாக்கிய சுவடு வெளிப்படாதவாறு ஆமென்பதற்கு அறிகுறியாய் தலையினை அசைத்து வைக்கிறான் அவன்.

"நல்லொரு பிறவி பாரும். இப்ப நான் ஒரு சிவில் எஞ்சினியர். இண்டைக்கு நான் இந்த நல்ல நிலையை எட்டிப் பிடிக்கிறதுக்கு ஆதாரமாய் இருந்தவர், ஆறுமுகம் அதிபர். அதை நான் என்றைக்கும் மறக்க இல்லை. இனி மறக்கவும் மாட்டன்."

நன்றியுணர்வில் அந்த மனிதரின் விழிகள் லேசாகப் பனிப்பதை மூர்த்தியாலும் உணரமுடிந்தது. அப்பாவின், நல்ல மனதிற்கும், உயரிய குறிக்கோளுக்கும், கண்ணியமான வாழ்வுக்கும் கிடைத்திருக்கின்ற இப் புகழ் மாலை எத்துணை உயரியது என்பதனை மூர்த்தியால் வரையறுக்கவே முடியவில்லை. "நல்ல மனிதர்கள் இந்த உலகத்திலே நீண்ட நாட்கள் வாழ்ந்ததேயில்லை எண்ட உண்மையை அதிபர் ஆறுமுகத்தை வைச்சுத்தான் நான் ஏற்றுக் கொண்டனான்."

'இ— இ... இ .. இவர் என்ன? சொல்லுறார்' என மனதிற்குள் தடுமாறிய மூர்த்தி வாய் விட்டே கேட்கிறான்.

"நீ நீ... நீங்கள் என்ன சொல்லுறீங்கள்"

நீர் கேள்விப்படவில்லையே? எனக்கு எங்கடை வீட்டுக்காரர் போன் பண்ணினார்" "என்னண்டு?" அவசரப்படுகிறான் மூர்த்தி இவனது அந்தரத்தை விநோதமாய் நோக்கிய அவன் மெதுவாகவே கூறுகிறான்

"அதிபர் ஆறுமுகம் இறந்து போயிற்றாராம்."

"அப்பா" என இந்த உலகமே அதிரக் கத்த வேண்டும் போல் ஒருவித வெறி அவனுள் முகிழ்த்த வேகத்திலேயே, தொண்டைக்

குழிக்குள் எல்லா ஓசைகளும் சமாதியாகிப் போகிறது. விழிக்குள் குளங்கட்டிய நீரை அடுத்தவன் அறியாமல் மெல்லத் துடைக்கிறன் மூர்த்தி.

நெஞ்சின் ஆழம் வரை வேதனைச் சுமை பாறுங்கல்லா அழுத்த தலைக்குள் எதுவோ? ''கிர்'' என்ற வேகத்தில் சுழலத் தன்னைத்தானே சமாளிக்க முடியாதவனாய் சீற்றில் தலை சரித்து கண்களை இறுக மூடிக் கொள்கிறன்.

''அப்பா! போயிற்றீங்களாப்பா உங்கடை அன்புக்கும், ஆசைக்கும் உரிய மகனை மன்னிக்காமலே போயிற்றீங்களாப்பா இத்தனை உயரிய இலட்சியங்களை உருவான உங்களுக்குப் பிள்ளையாய் நான் பிறந்தே இருக்கக் கூடாதப்பா இனிமையும், இதமும் உள்ள மாம்பழத்திலை புழு இருந்து அதனை உதவாமல் செய்தது போல, உங்கடைநல்லொழுக்கம், புகழை அழித்தொழிக்கின்ற உதவாமல் செய்கின்ற ஒரு அற்பப் புழு வாய் நான் ஆகிப் போனனே அப்பா, இந்தக் கள்வனுடைய கையாலை கொள்ளி வாங்கி உங்கடை ஆத்மாவும் அசுத்தப்பட வேண்டா மப்பா.''

எதைஎதை எல்லாமோ நீளமாய் நினைத்துக்கொண்ட மூர்த்தியின் மனதுக்கு எந்த முடிவுமே சரியானதாகத் தோன்றாத நிலையில் வேத னைக்குள் குமைந்து கொண்டிருந்தான்.

ப்ரதர் என்ன? யோசனை '':ஜவ்னு வந்திட்டுது இறங்க இல்லையா? பக்கத்து சிற்காறரின் அழைப்பில் விழிகளைத் திறக்கிறன், மூர்த்தி அவன் மனதிற்குள் இருள் சூழ்ந்திருந்த போதிலும் பொழுது நன்கு புலர்ந்திருந்தது. பஸ்ஸிலிருந்து ஒவ்வொருவராய் இறங்கிக்கொண்டி ருந்தார்கள் மூர்த்திக்கு இருக்கையை விட்டு எழுந்திருக்கக் கூட மன தில்லாதவனாய் எங்கோ வெறிக்கப்பார்க்கிறன் எல்லோரும் இறங் கிய பின்னல் மெதுவாக எழுந்து வெளியே வருகிறன். 'அப்பாவின் பிரேதத்தில் போய் விழிக்க எனக்கென்ன தகுதி இருக்கிறது'' எனத் தனக்குத் தானே கேட்டுக்கொள்கையில்.

''மூர்த்தி'' என ஆதரவாய் அவன் தோளை ஒரு கரம் தொடுகிறது. திரும்பிப் பார்க்கிறன் மூர்த்தி, சிவம் அவனது ஊர்க்காரர் அவனுக் கும் அவனது குடும்பத்திற்கும் தெரிந்தவர்.

''மனசைத் திடப்படுத்திக் கொள்ளுங்கோ தம்பி, பிறக்கிற மனிதன் ஒரு நாள் இறப்பது நியதி நீங்களே இப்பிடிக் கலங்கினல் உங்கடை உடன் பிறப்பு, தாய் இவையள் எப்பிடித் தாங்குவினம்''

அழக்கூடாதென தன் மனதைக் கல்லாக்கிக் கொண்டாலும், அகத் தின் அழகு, அவனையும் மீறி முகத்தில் தெரியத்தான் செய்தது. மீண் டும் சிவம் தொடர்கிறர்.

உங்களுக்கு நேற்று பிளேற் எண்டு கதைச்சினம். நாடு விட்டு பிற நாடு போற உங்கடை மனதைக் குழப்பக் கூடாதெண்டு உங்களுக்கு அறிவிக்கேல்லே எண்டு வீட்டிலே கதைத்தினம் என்ன செய்தாலும் பெத்த தகப்பனல்லே.

சிவம் கேள்வியும் பதிலுமாய் எதை, எதை எல்லாமோ பேசிக் கோண்டிருக்க மூர்த்தி எதுவுமே பேசாது மௌனித்திருந்தான். ஒன்றை நினைக்கத் தெய்வம் இன்னொன்றாய் விதித்து விட்ட விதியினை அவன் யாருக்கும் சொல்லி என்ன? பயன் விளையப் போகிறது.

''நானும் ஒவ்விசுக்குப் போய் லீவு போட்டிட்டு வாறன். நீங்கள் போவீங்கள் தானே? தம்பி''

ஆமென்பதற்கமைய மெல்லத் தலையசைக்கிறான் மூர்த்தி.

பஸ்ராண்டினுள்ளே வந்து கையிலிருந்த சூட்கேஸை கீழே வைத்துவிட்டு, அங்கிருந்த கம்பியொன்றுடன் சாய்ந்தவாறு மூர்த்தி நின்கிறான்

எவருமே அவனை லட்சியம் பண்ணாதவர்களாய் தம் போக்கில் போய் வந்து கொண்டிருந்தார்கள்.

இன்று பொறுப்புள்ள குடும்பத் தலைமை அவன் தலைமேல் சுமத்தப்படும் நினைவுகள்! தாங்கக்கூடிய தன் நம்பிக்கை அற்றவனாக எதிர்பாரா சுமையை எப்படித் தாங்குவான். தன்னையே வழி நடத்த முடியாத நிலையில் எல்லோரும் போல் அவன் மனம் தாழ்வு மனதால் தத்தளித்தது. அவன் நிலைகண்ட அருகில் பிரயாணம் மேற்கொண்ட அந்தக் கனவான் அவனின் நிலை அறிந்து மனத்திடம் ஊட்டி வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

அங்கே மரண ஓலம் எல்லோர் மனங்களையும் உருக்கியது மங்கள வீடு மரண வீடான நிலையில் அவன் நிலையில் அவன் கால் அடிகள் மரணப்படுக்கையில் இருக்கும் அதிபர் ஆறுமுகத்தின் அண்டை சென்றது. அன்னையும், தங்கையும் திகைப்புடன் நிலைதடுமாறியவர்களாய் மயங்கி விழும் காட்சியைக் கண்ட பல இதயங்களின் இரக்க சிந்தை அங்கே நின்ற டேவிற்றின் இதயத்திலும் ஏதோ ஒரு கசிவை ஏற்படுத்தியது. எதிர்பாரா சந்திப்பாய் எல்லோர் மனத்திலும் பல சிந்தனைகள் எழுந்தும் கூற முடியாத நிலையில் மரண ஊர்வலம் மௌன ஊர்வலமாக அதிபரின் இறுதிப்பயணம் தொடர்கின்றது. அங்கே தாயின் நிலை தங்கையின் அலறல்.

**ஏனையோரது ஏக்கங்கள் எல்லாம் மூர்த்தியின் மௌனங்கள் கலையும் நேரத்தை எதிர்பார்த்து நிற்கின்றன- அந்த மௌனங்கள் கலைவது எப்போது?**

[தொடரட்டும்]

# மௌனங்கள் கலையும்போது ... 6

— சௌந்தரன் —

அதிபர் இறந்த செய்தி மூர்த்திக்கு அறிவிக்கப்படவில்லையே! அப்படியிருக்கும்போது இந்தச் செய்தி அவனுக்கு எப்படித் தெரிய வந்தது? கொழும்பிலிருந்து அவன் யாழ்ப்பாணத்துக்கு ஏன் திரும்பினான். வெளிநாட்டுப் பயணம் திடீரென்று ரத்தாகி விட்டதோ? மூர்த்தியின் தாயார், தங்கை புவனா, காதலி பிரியா, டேவிட், நெருங்கிய உறவினர்கள், மற்றும் அங்கு கூடியிருந்தோர் அனைவரது உள்ளத்திலும் உதித்த கேள்விகள் இவை. தன்னை மறந்து தகப்பனை நினைந்து புலம்பிக்கொண்டிருக்கும் மூர்த்தியிடம் இதனை யார் கேட்பது. கேட்கும் நிலையில் ஒருவருமே இல்லை. கேட்டாலும் பதில் கூறக்கூடிய நிலையிலா அவன் இருக்கின்றான்? கொள்ளி வைப்பதற்கு மகன் இங்கு இல்லையே என்ற குறை இல்லாமல் போயிற்று, என்று அங்கிருந்த பலர் தமக்குள் கதைத்துக் கொண்டார்கள்.

உற்றார், உறவினர் நண்பர்கள், மாணவர்கள் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், எல்லாம் புடைசூழ இறுதிக் கிரியைகளுக்காக அதிபரின் பூதவுடல் சுடுகாட்டை நோக்கி விரைகிறது. "காடுவரை பிள்ளை கடைசிவரை யாரோ" என்பது போல கொள்ளிக்குடம் சுமந்து கொண்டு கண்ணீர் பெருக்கெடுத்தோட அடைத்துப்போன குரலில் "அப்பா" "அப்பா" என்று அழுது கொண்டு ஊர்வலத்தின் மத்தியில் சென்று கொண்டிருந்தான் மூர்த்தி. வீட்டிலே தாயாரும் தங்கையும் துயரத்தின் எல்லையில் துவண்டு போய் மூர்ச்சைநிலை அடைந்து விட்டனர். அவர்களை அருகிலிருந்து பார்த்து தேற்றிக்கொண்டிருந்தாள் பிரியா.



இறுதிக் கிரியைகளை முடித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மூர்த்தியின் உள்ளத்தில் தகப்பனாரைப் பற்றி பல்வேறு தரத்திலுள்ளவர்கள் தமது இரங்கலுரையின் போது அன்று ஆற்றிய புகழுரைகள் திரும்ப ஒலித்துக்கொண்டிருந்தன. பெரும்பாலானோர் அவரது கடமையுணர்வு. கண்ணியம், நேர்மை, பரோபகார சிந்தை போன்ற நல்ல பண்புகளைப் புகழ்ந்து உரைத்தனர். அவற்றை

யெல்லாம் எண்ணி எண்ணி அந்த நிலைக்குத் தான் இல்லையே, டேவிட்டின் விடயத்தில் தான் ஒரு கறைபட்டவனுகிவிட்டானே, என்று வருந்தினுன் அவன். கொழும்பிலிருந்து வீடு திரும்பியவுடன் அப்பாவின் காலில் விழவேண்டும், டேவிட்டின் பணத்தை தான் திருடிய சம்பவத்தை அவரிடம் கூறவேண்டும், அந்தப் பாவத்துக்குப் பிராயச்சித்தமாக கொழும்பிலே பணத்தைப்பறிகொடுத்து தவியாய்த் தவித்த ரமணனுக்கு தான் பண உதவி செய்து அவனை வெளிநாட்டுக்கு அனுப்பிய சம்பவத்தைக் கூற வேண்டும். அதன் மூலம் அவர் மனதைக் குளிரவைக்க வேண்டும், தன் மகன் நேர்மையானவன், தன்னைப் போன்றவன் என்று அவர் மகிழ வேண்டும், அதைப்பார்த்து தன் அன்னை மனம் தளிர வேண்டும், தங்கையின் சந்தேகம் தீர வேண்டும், பிரியாவின் மனம் மகிழவேண்டும் என்றெல்லாம் எவ்வளவோ எதிர்பார்த்துப் பத்து மணிநேர பஸ் பயணத்தை பத்து யுகங்களாக அனுபவித்து யாழ்ப்பாணம் வந்த மூர்த்தி, அத்தனையும் நிறைவேருமல் அப்பாவின் மரணத்தை எதிர்நோக்க வேண்டியாகிவிட்டதே என்று நினைத்து நினைத்து வருந்தினுன். அப்பாவின் எண்ணத்தில் தானெரு திருடன் மட்டுமல்ல, உண்மையை மறைத்தவன் என்ற எண்ணம் கூடக்குடி கொண்டிருந்திருக்குமே, அந்தக் குறையை மனதில் வைத்துக் கொண்டே அவர் மறைந்து விட்டாரே, அந்தத் தவறுக்காக அவரிடம் சிறு தண்டனை கூடப் பெற்றிருந்தாலும் அது அவர் மனதுக்கு சாந்தியைக் கொடுத்திருக்குமே என்றெல்லாம் வருந்தியது அவன் மனம். தனது மௌனங்கள் கலையுமுன் தகப்பன் மறைந்தது அவனுக்கு வருத்தமாகவே இருந்தது. மரண வீட்டில் டேவிட்டைக் காண நேர்ந்த ஒவ்வொரு கணமும் அவன் மனம் அனலிடைப்பட்ட புழுவாய் துடிதுடித்தது. ஆண்டவனே இந்த வேதனைக்கு ஒரு எல்லையே இல்லையே என்று அவதிப்பட்டுக்கொண்டிருந்தான் அவன்.

புயல் அடித்து ஓய்ந்தது போலிருந்தது அங்கு பெரும்பாலானேர். மூர்த்தியிடம் விடைபெற்றுச் சென்றுவிட்டனர். ஒரு சிலர் மட்டும் ஆங்காங்கே மௌனமாக உட்கார்ந்திருந்தனர். மூர்த்தியின் தாயார் கண்ணீர் வற்றிப் போனவளாய் எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தாள். தங்கை புவனு அழுதழுது ஓய்ந்தவளாய் தோழி பிரியாவின் தோளில் முகம் புதைத்தபடி கிடந்தாள். கவலையே உருவான மூர்த்தியையே பார்த்துக்கொண்டு அடிக்கடி அரும்பும் கண்ணீர்த்துளிகளைத் துடைத்துக்கொண்டிருந்தாள் பிரியா.

தன் நண்பனை இழந்த கவலையுடன் மூர்த்தி படும் வேதனையையும் பார்த்து வருத்தப்பட்டுக் கொண்டு அங்கு ஒரு கதிரையில் அமர்ந்திருந்தார் டேவிட். அவரது மனைவியும் அவர் அருகே உட்கார்ந்திருந்தாள். பஸ்ஸிலே அதிபர் இறந்த செய்தியை அறிவித்த அந்தசிவில்

எஞ்ஜினியரும் தனது நன்றிப் பெருக்கைக் காட்டும் வகையில் இன்னும் அங்கு அமர்ந்திருந்தார். மௌனம் அங்கு சிறிது நேரம்வரை நீடித்தது. யாரும் எதுவுமே பேசவில்லை. மூர்த்தி சிந்தனை வசப்பட்டிருந்தான்.

அமைதியை முறித்துக்கொண்டு டேவிட் மனைவி சகிதம் எழுந்து மூர்த்தி அருகில் சென்றார். "தம்பி இனி யோசித்துப் பிரயோசனம் இல்லை. கடவுளுடைய சித்தம் அப்படி, இனிமேல் நடக்க வேண்டியதைப் பாரும்." தன்னுடைய ஐநூறு ரூபாவைத் திருடியவன் என்ற கோபம் எல்லாவற்றையும் மறந்து டேவிட் அமைதியாகக் கூறினார். அணை கடந்த வெள்ளமானான் மூர்த்தி, தன்னை மறந்துவிட்டான். அவன் "என்னை மன்னித்து விடுங்கள் சேர், என்னை மன்னித்து விடுங்கோ" என்றபடியே அவரது காலில் விழுந்து குழந்தையைப் போல அழத் தொடங்கிவிட்டான் மூர்த்தி.

அங்கிருந்த அனைவரும் ஒருகணம் எதும் புரியாமல் திகைத்தனர். டேவிட்டுக்கு அதிர்ச்சியாக இருந்தது. "என் தம்பி என்னரை காலில் " என்று காலடியில் கிடந்தவனை தூக்கி நிமிர்த்தினார் டேவிட். "சேர் கொழும்பில் வைத்து உங்கள் பணத்தைத் திருடிய இந்தக் கயவனை மன்னித்து விடுங்கள் சேர்" மூர்த்தி அவர் கையைப் பற்றிக் கொண்டு கதறினான். "அப்பா தந்த பணத்தை வீட்டில் தவறுதலாக விட்டுவிட்டுப் போய் அதைக் கொழும்பில் யாரோ திருடி விட்டார்கள் என்று எண்ணி வேறு வழியின்றி உங்கள் பணத்தைத் திருடிவிட்டேன். என்னை மன்னிச்சு விடுங்க சேர்" என்று தான் திருடியதற்கான சூழ்நிலையை டேவிட்டிடம் கூறிக் கண்ணீர் விட்டான் மூர்த்தி. டேவிட்டுக்குத் துக்கம் தாழ முடியவில்லை. எற்கனவே அவர் மனம் மூர்த்தியின்பால் இழகிப் போய் இருந்தது. இப்போது உருகியே போய்விட்டது. "தம்பி நடந்தது நடந்துவிட்டது. தவறு செய்வது மனித இயல்பு சந்தர்ப்பம் சூழ்நிலைகள்தான் மனிதனைத் தவறு செய்யும்படி தூண்டுகின்றன. நான் உன்னை மன்னித்து விட்டேன். இனி ஆக வேண்டியதைப் பார் தம்பி" என்று மூர்த்தியைத் தேற்றுவதற்கு டேவிட் எவ்வளவோ கஷ்டப்பட வேண்டியிருந்தது அங்கிருந்த அனைவரும் இச்சம்பவத்தை அமைதியாக இருந்து பார்த்துக் கொண்டிருந்தனர். பலருக்கு விடயம் புரியவில்லை; மூர்த்தியின் தாயார், தங்கை புவனு, காதலி பிரியா, டேவிட், டேவிட்டின் மனைவி இவர்களைத்தவிர, எனையோருக்கு இச்சம்பவம் விளங்கியிருக்க நியாயமில்லைத்தான், இந்த ஐநூறு ரூபா சம்பவத்தில் இதுவரை காலமும் மூர்த்தியின் மௌனம் மேற்குறிப்பிட்டவர்களின் மனத்தில் பல்வேறு சலனங்களை உருவாக்கியிருந்தது. ஆனால் இன்று அவன் மௌனம் கலைந்தபோது அச்சலனங்கள் சூரிய ஒளி பட்ட பனித்துளி போல நீங்கிச் சென்றுவிட்டன. மகன் மீது தாய் கொண்ட சந்தேகம், அண்ணன் மீது தங்கை புவனு கொண்ட சந்தேகம், காதலன்மீது பிரியா கொண்ட

அவநம்பிக்கை, டேவிட்டின் மீது அவன் மனைவி இன்னும் வைத்திருந்த அந்த சிறிய ஐயப்பாடு, எல்லாமே மூர்த்தியின் மௌனத்தின் கலேவில் கலந்து சென்றுவிட்டன. ஆனாலும் அதிபர் மறைவதற்கு முன்னால் இந்த மௌனம் கலேந்திருந்தால் அவரது ஆத்மாவுக்கு சாந்தியாக இருந்திருக்குமே என்றுதான் அனைவரும் கவலேப்பட்டனர்.

டேவிட்டும் மனைவியும் விடைபெற்றுச்சென்றனர். கண்ணீரோடு விடைகொடுத்தான் மூர்த்தி, மீண்டும் அங்கு ஒருவித அமைதி இடை யிடையே சில பெருமூச்சுக்கள் பிரியாவின் மனதில் அமைதியின்மை வெளிநாட்டுக்குசென்று போன மூர்த்தி ஏன் திரும்பிவந்தான் தகப்பன் இறந்த செய்தியை யாரும் மூர்த்திக்கு அறிவிக்கவில்லேயே! கொழும்பில் என்ன நடந்தது? இக்கேள்விகளுக்கெல்லாம் விடை அறிய அவள் மனம் துடிதுடித்தது. தாயாரும் புவனுவும் இவ்விடயம்பற்றி மூர்த்தியுடன் பேசக்கூடிய நிலேயில் இல்லே. ஆனாலும் அவர்கள் உள்ளத்திலும் ஒரு மூலேயில் அத்தகைய கேள்விகள் எழுப்பப்பட்டுக் கொண்டேயிருந்தன. மூர்த்தியோ மௌனமாக இருந்தான். அந்த மௌனம் எப்போது கலேயுமென்று ஆவலாயிருந்தாள். பிரியா அன்று பயணம் புறப்பட்ட போது தனது போட்டோவைக் கையில் கொடுத்து என்னே மறந்து விடமாட்டீர்களே என்று குலுங்கிக் குலுங்கி கண்ணீர் விட்டழுத காட்சி பிரியாவின் நினேவுக்கு வந்தது. அந்தக் காட்சியை நினேத்த போது அவள் கண்களில் மீண்டும் கண்ணீர்த்துளிகள் பனித்தன. அவள் அழுத காட்சியைக் கண்டுவிட்டுத் தானும் கலங்கிக் கண்ணீர் விட்டுப் பின் தன்னேத் தேற்றி விடைபெற்றுச் சென்ற மூர்த்தி வெளி நாடு செல்லாமல் மீண்டும் திரும்பி வந்துவிட்டான் என்றால் அதற் கான காரணத்தை அறிய அவள் மனம் துடிப்பது இயல்புதானே. அருகில் போய்க் கதைக்கலாம் என்று நினேத்தாள். ஆனல் ஆட்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்களே. புவனுவை விட்டுக் கேட்கலாமென் றால் அவளோ சோகத்தின் பிடியில் சூழ்ந்திருக்கிறளே.

நேரமோ போய்க் கொண்டிருந்தது. பிரியா பொறுமையிழந்து விட்டாள். தன் இருக்கையை விட்டு எழுந்தாள் மூர்த்தியின் அருகில் சென்றாள் கொழும்பில் நடந்த சம்பவங்களே மூர்த்தி கூறிய பின்னர் தான் பிரியா அமைதியடைந்தாள். இருவரும் சிறிது நேரம் அமைதி யாகக் கதைத்துக்கொண்டிருந்தனர். கவலேயின் பிடியில் வாழும் மூர்த்திக்கு பிரியா ஆறுதல் கூறிக்கொண்டிருந்தாள். இறுதியில் வெளி நாட்டுப்பயணத்தைக் கைவிடும்படியும், உள்ளூரில் ஏதாவது வேலேக்கு முயற்சி செய்யும்படியும் அதற்குத் தனது அப்பா மூலம் உதவி செய் வதாகவும் பிரியா கூறினாள். தன்னேவிட்டுப் பிரிந்து செல்வதைப் பிரியா விரும்பவில்லே என்பதை உணர்ந்த மூர்த்தி பார்க்கலாம் என்று தலே யாட்டினான்.

அதிக நேரம் மூர்த்தியுடன் கதைப்பதை பிரியா விரும்பவில்லை. அவனுடன் கதைப்பதை நிறுத்திவிட்டு புவனுவுக்கு அருகில் போய் அமர்ந்தாள். புவனுவிடம் விபரங்களைக் கூறினாள். புவனு தாயாரிடம் நடந்தவற்றைக் கூறினாள். தாயோ மெய்சிலிர்த்துப்போனாள். தன் கணவனின் பரோபகார சிந்தை தன் பிள்ளைக்கும் அமைந்திருப்பதை எண்ணி மனதிற்குள் பெருமைப்பட்டாள். கொழும்பில் ரமணனுக்கு உதவி செய்து தன் வெளிநாட்டுப் பயணத்தையே தியாகம் செய்த அந்தத் தியாக சம்பவத்தைக் கேட்டு உவப்படைவதற்கு அவர் இல்லையே, என்ற கவலைதான் அவளை ஆட்கொண்டது. மீண்டும் அவள் கண்களில் நீர் பெருகியது. தன் பிள்ளை செய்த அந்த நற்செயலைக் கேட்டு பெருமை கொள்ளாமல் அவனைப் பற்றிய ஒரு தப்பான அபிப் பிராயத்தோடு கண்களை மூடிவிட்டாரே என்று கூறி அழ ஆரம்பித்து விட்டாள். பிரியா அவளைத் தேற்ற முயன்றாள். எனினும் இதுவரை கேள்விமேல் கேள்வி கேட்டுக் கொண்டிருந்த உள்ளங்களுக்கு மூர்த்தி யின் மௌனத்தின் கலைவில் பதில் கிடைத்தது ஒரு ஆறுதலாகவே இருந்தது.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. பிரியா அடிக்கடி மூர்த்தி வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருந்தாள். டேவிட், அவர் மனைவி, நன்றி மறவாத அந்த சிவில் எஞ்ஜினியர், ஆகியோரும் இடையிடை யே வந்து மூர்த்திக்கும் குடும்பத்தார்க்கும் ஆறுதல் கூறி வந்தனர். ஒருநாள் சனிக்கிழமை அனைவரும் ஒரே நேர தில் சந்திக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. பல்வேறு விடயங்கள் பற்றி அலசி ஆராய்ந்த பின்னர் இறுதியில் மூர்த்தியின் எதிர்காலம் பற்றிக் கதைக்கத் தொடங்கினர்.

டேவிட் மூர்த்தியைப் பார்த்துக் கேட்டார் ''தம்பி மூர்த்தி இனி இந்தக் குடும்பப் பொறுப்பெல்லாம் உம்முடைய தலையில் தான் அதை யெல்லாம் கவனிப்பதற்கு உமக்கு ஒரு தொழில் தேவை, ஏதாவது முயற்சி எடுக்கிறீரா''? என்று கேட்டார்.

''உள்ளூரில் எவ்வளவோ முயற்சி செய்துவிட்டேன் இங்கு வேலை கிடைப்பது குதிரைக் கொம்புதான் வெளிநாட்டுக்குப் போய் உழைக் கத்தான் முயற்சி செய்கிறேன்'' இது மூர்த்தியின் பதில். ''ஜேர்மனி பிரான்ஸ் என்றெல்லாம் போய் நிறையப்பேர் வேலை இல்லாமல் நிற்கிறார்கள், அங்கே போய்ச் சும்மா இருப்பதில் பிரயோசனம் இல்லை'' குறுக்கிட்டாள் பிரியா. அவளுக்கு மூர்த்தி வெளிநாடு போவதில் இஷ்டமில்லை.

''பிள்ளை சொல்வது உண்மைதான் ஆனால் மத்திய கிழக்குப்பக்கம் போகலாம்தானே. வேலையோடு போகலாம் நல்ல சம்பளமும் எடுக்க லாம்'' இது சிவில் எஞ்ஜினியரின் கருத்து.

“மத்திய கிழக்குப் பக்கம் போகலாம்தான் ஆனுல் அதற்கு நிறையப் பணம் தேவைப்படும். அத்தோடு இப்போ எல்லா ஏஜன்சிகளையும் நம்பவும் முடியாது” தன் கருத்தை மூர்த்தி கூறி முடிக்கமுன் குறுக்கிட்டாள் பிரியா.

“மத்திய கிழக்கு கொன்ட்ருக்ட் இரண்டு அல்லது மூன்று வருடங்கள்தான் அதற்குப்பின் இங்கு வந்து என்ன செய்யப்போகிறீர்கள்?” ஆர்வத்துடன் கேட்டாள் பிரியா. யாருமே பதில் சொல்லமுடியாது மௌனமாக இருந்தனர். பிரியா தொடர்ந்தாள். “பணம் பணம் என்று இன்று எல்லோருமே வெளிநாடுகளுக்குச் செல்லுகிருர்கள். வெறும் பணத்திற்காக ஆசாபாசங்களைத் துறந்து இல்லற பந்தங்களையே மறந்து வெறும் இயந்திர வாழ்க்கை வாழ்வது ஒரு வாழ்வா? வெறும் ஆடம்பர மோகத்தால் பெருமையடிக்கும் ஒரு விளம்பர வாழ்க்கை தானே அவர்கள் வாழ்கிருர்கள். ஒரு ஏழை வீட்டில் காணப்படும் நிம்மதிகூட வெளிநாட்டுப் பணக்காரரிடம் காண முடிவதில்லையே... நீ என்ன சொல்லுகிருய் புவனு” என்று புவனுவுக்குக் கூறும் பாங்கில் தன் மனநிலையை மூர்த்திக்கு வெளிப்படுத்தினுள் பிரியா. மூர்த்தி தன்னை விட்டுப் பிரிவதைத் தான் விரும்பவில்லை என்பதை அவள் புலப்படுத்தினுள்.

பிரியாவின் எதிர்பார்ப்பு மூர்த்தி இங்கேயே ஒரு நல்ல அரசாங்க வேலை பார்த்துக் கொண்டு தங்கிவிட வேண்டும் என்பதாகவே இருந்தது. ஒவ்வொரு இளம் பெண்ணிடமும் இருக்கும் எண்ணப் பிரதிபலிப்பு பிரியாவிடமும் இருக்கத்தான் செய்தது. அவள் மட்டும் இளமைக் கால இனிய நினைவுகளுக்கு விதி விலக்காகிவிடமுடியுமா என்ன?

அனைவரும் பேசாமல் இருந்தனர். பிரியா மீண்டும் தொடர்ந்தாள். “மூர்த்தி உங்களிடம் தகுதி உண்டு, திறமையும் உண்டு உங்களுடைய அப்பாவுக்கு இருக்கும் இவ்வளவு பெரிய செல்வாக்கைப் பயன் படுத்தி இங்கேயே ஒரு நல்ல வேலை எடுக்கலாம். அதிலிருந்து கொண்டே நீங்கள் மேற்படிப்பும் படிக்கலாம். பட்டம் பெறலாம். தந்தைவழி மைந்தன் என்ற வகையில் அப்பாவின் புகழை மேலும் உயர்த்தலாம் அதை விட்டுவிட்டு வெறும்பண மோகத்திற்கு அடிமையாகாதீங்க” தன் மனதில் உள்ளதை எடுத்துரைத்தாள் பிரியா.

மூர்த்திக்குத் தர்மசங்கடமாய்ப் போய்விட்டது. பருவப் பூரிப்பிலே கண்ணிறைந்த கணவனெருவனை எதிர்பார்த்துக் காத்திருக்கும் புவனு ஒருபுறமும், இளமைக்கால வசந்த எண்ணங்களை மனதில் உலவவிட்டுப் பார்த்து அவைகளை அனுபவிக்கத் துடித்துக் கொண்டிருக்கும் பிரியா மறுபுறமுமாக மூர்த்தியின் சிந்தனையைச் சிதறடித்துக் கொண்டிருந் தனர்.

வறுமைப் புயலிலே சிக்கிச் சீரழியத் தொடங்கிவிட்ட அந்த நிலையில் தன்னையும் எதிர்காலத்தையும் எதிர்காலப் பொறுப்புக்களையும் மனதில் போட்டுக் குமைந்து கொண்டிருந்தபோது தபால் காரனின் மணியடிக்கும் சத்தம் கேட்டது, கடிதத்தை வாங்கிப் பிரித்தான் மூர்த்தி.

அன்புள்ள நண்பன் மூர்த்திக்கு,

நான் ஜேர்மனி வந்து சேர்ந்துவிட்டேன். உன் உதவியால்தான் இது நடந்தது. இங்கு பல நண்பர்களைச் சந்தித்தேன். காலத்தால் அழியாத உன் தியாக உதவியைச் சொன்னேன். மறுநாளே அவர்கள் பத்தாயிரம் ரூபா பணத்தை என்னிடம் தந்து இந்தத் தொகையை மூர்த்திக்கு அனுப்பி மூர்த்தியையும் இங்கு வரும்படி கடிதமெழுது என்று எனக்குக் கூறினார்கள்.

இந்தப்பண உதவி எனக்காகவோ உனக்காகவோ இல்லையாம். உன் அப்பாவிடம் தாங்கள் படித்ததற்கும் அவரிடம் பெற்ற உதவிகளுக்கும் நன்றி செலுத்தும் வகையில் அமைகிறதென்றும், தந்தைக்குப் பின் மைந்தன் தப்பாமல் அவர் வழியே வாழ்வதற்குத் தம் அன்புக் காணிக்கை என்றும் குறிப்பிட்டார்கள். அதிபரைப்பற்றி அவர்கள் அடிக்கடி புகழ்ந்து பேசுகிறார்கள் அத்தனை உயர்வான ஒரு மனிதனுக்கு நீ மகனாய்ப் பிறந்ததால்தான் உன்னிடம் இத்தனை தியாக மனப் பாங்கும் அமைந்திருக்கிறது இத்துடன் நான் அனுப்பும் பத்தாயிரம் ரூபாய்க்கான காசோலையைப் பெற்றுக்கொள்ளவும் இப்படிக்கு நண்பன் ரமணன்.

ரமணனின் நன்றியுணர்ச்சியை நினைந்து தன்னை மறந்து நின்றான் மூர்த்தி. அவனது நெஞ்சத்தில் இப்போது இமயமாகத் தெரிவது அதிபர் ஆறுமுகம் என்ற அந்த உருவம்தான் ரமணனின் கடிதம் மட்டுமல்ல சுடுகாட்டிலே மக்கள் காட்டிய கண்ணீர் அஞ்சலிகளும், தகப்பனாரின் சேவை, அவரின் நல்லொழுக்கம், என்பவற்றை அவனுக்குத் திரும்பத் திரும்ப நினைவூட்டிக் கொண்டிருந்தன.

திரைகடலோடித் திரவியம் தேடி என்ன? அப்பா ஒரு அதிபராக இருந்து இத்தனை உயர்ந்த மனிதனாக வாழ்ந்து உலகை வென்று நிற்கிறாரே என்பதை நினைத்தபோது ஆசிரியத் தொழிலுக்கு நிகராக வேறு எதுவுமே அவனுக்குத் தோன்றவில்லை.

"என்னதம்பி கடிதத்தோடு எல்லாவற்றையும் மறந்து விட்டீராக்கும்" மூர்த்தியின் மௌனநிலையைக் கலைத்தார் டேவிட்.

“இல்லை, இல்லை, “பெற்றதாயும் பிறந்த பொன்னுடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே” என்று நான் படித்திருந்ததை நினைத்தால் எனக்கு வேறு எங்கும் செல்ல வேண்டுமா என்ற எண்ணம்தான் மேலோங்கி நிற்கின்றது. அப்பா ஒரு சொற்ப பணம் சம்பாதிக்கும் ஒரு அதிபராக இருந்து இத்தனை மனித உள்ளங்களிலும் ஒளியேற்றி குருவாகி நிறைந்து நிற்கும்போது அவர் சாதித்ததைவிட நான் இந்தப் பணத்தில் எதை சாதித்துவிடப் போகிறேன் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது” என்முன் மூர்த்தி.

மூர்த்தியின் உள்ளத்தில் தெளிவு ஒன்று ஏற்பட்டு விட்டதை உணர்ந்த டேவிட் சொன்னர். “அப்படியானல் நீங்கள் ஆசிரியத் தொழிலுக்கு விண்ணப்பிசதுப் பாருங்கோ நாங்கள் யாரையாவது பிடித்து முயற்சித்துப் பார்க்கிறோம் என்று கூறினர்.

கொழும்பிலே தங்கிநின்றபோது கஷ்டப் பிரதேச ஆசிரியர் பதவிக்கு வேடிக்கையாக விண்ணப்பித்ததை மூர்த்தி நினைவுபடுத்தினன். சமுதாயத்தை சீர்ப்படுத்துவதற்கேற்ற நல்ல வழிகளைக் காட்டுவதோடு தம் வாழ்விலும் அதனைக் கடைப்பிடித்து தாமும் வாழ்வதுடன் தம் மாணவர்களையும் வாழவைக்கும் ஒரு சிறந்த பணியாக ஆசிரியத் தொழில் விளங்குவதை மூர்த்தி மனப்பூர்வமாக உணர்ந்தான். அந்தப் பணியிலேயே தன்னை அர்ப்பணிக்க மூர்த்தி திடசங்கற்பம் பூண்டு விட்டான் மாதா, பிதா, குரு, தெய்வம் என்பார்கள் இங்கு தெய்வத்திலும் பார்க்க குருவுக்குக் கூடிய முக்கியத்துவமல்லவா கொடுக்கப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது மூர்த்தி தன் தந்தையின் பணியைத் தொடர்வதற்கு தனது வெளிநாட்டுப் பயணத் திட்டங்களையெல்லாம் தியாகம் செய்துவிட்டு ஆசிரியர்ப் பணியைத் தேர்ந்தெடுக்கத் தீர்மானம் எடுத்துவிட்டான்.

இந்தப் பதவிமட்டும் கிடைத்துவிட்டால், அப்பாவைப் போல நானும் ஒரு சிறந்த ஆசிரியனுக வாழ முடியும். இந்த சமூகத்தின் புரையோடிய புண்களைக் கழுவும் சிறந்த தொழில் அதைத்தவிர வேறு என்ன இருக்கிறது என்ற எதிர்பார்ப்போடு அவன் உறுதியாக நின்முன். எல்லோரும் அவனது அசைக்க முடியாத அந்த இலட்சிய வேட்கையைப் புரிந்தவர்களாக அவன் ஆசிரியனுகப் போகும் அந்த நாளை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். அந்தப்பதவியை அவன் அடைவதற்காகத் தம்மாலியன்ற உதவிகளைச் செய்யத் தயாராக இருந்தனர் டேவிற்றும், சிவில் எஞ்சினியரும் அது மட்டுமன்றி மூர்த்தியை மேற்படிப்புப் படிக்கவைத்து அவனை ஒரு பட்டதாரியாக்கி, அதிபரின் வழியில் அவனையும் வழி நடத்தித், தமது நன்றிக் கடனைத் தீர்த்துக் கொள்ளத் திடசங்கற்பம் பூண்டனர் அவர்கள் அந்தப் பணியில் தன்னையும் அர்ப்பணித்துக் கொண்ட பிரியாவின் மனதில் மூர்த்தி ஒரு இலட்சிய புருஷனுக நிறைந்து நின்முன்.

# ஒரு மேதையும் ஒரு பேதையும்

**ஆனந்தி செந்தில்**
ஏழாலை.

பாஸ்கரன் தானே கல்யாணப் பெண்ணைப் பார்த்து மனம் விரும்பிச் சம்மதமளிக்க வேண்டுமென்ற முடிவான தீர்மானத்தோடுதான் அங்கே வந்திருந்தான். பெற்றோர்களையும் மீறித் தான் விரும்பிய பெண்ணைக் கட்டிக் கொள்வது அவன் நோக்கமல்ல. அப்படி இருந்திருந்தால் என்றைக்கோ அவன் கல்யாணம் நடந்தேறியிருக்கும். இது யாருடைய விருப்பமுமின்றி, விதி வசத்தால், நடக்கப் போகிறது. இதற்கு ஒரு கருவியாகத் தன்னுடைய பங்கு, ஆன்ம பலம் இருப்பதாகவே இன்னும் அவன் நம்பிக்கை. அவனுக்கென்று சில கோட்பாடுகளும், கொள்கைகளையொட்டிய தேவைகளும் இருக்கவே செய்தன. இவற்றை விலக்க முடியாமலே, அவன் பெண்ணைப் பார்ப்பது அவசியம் என்றுகருதிப் புரோக்கரை அழைத்துக் கொண்டு வந்து அந்த வீட்டிற்குத் தானும் ஒரு விருந்தாளியாக வந்திருந்தான்: இப்போதைக்கு விருந்தாளி மட்டுமே.

அவள் வரப்போகிறாள். இன்னும் எத்தனை நிமிடங்களுக்குத்தான் இப்படிக் காத்துக் கொண்டிருப்பது. அவளைப் போட்டோவில் கூடப் பார்த்ததில்லை. அவள் எப்படி இருப்பாள் என்று கற்பனை செய்யவும் அவனுக்கு மனம் இடம் தரவில்லை. கற்பனையை விட, அவன் வாழ்க்கையை நேராகவே தரிசிக்கிறவன்.

போன வருடம்தான் அவன் லண்டனில் தனது ஆராய்ச்சிப் படிப்பை முடித்துக் கொண்டு நாடு திரும்பினான். இப்போது பல்கலைக் கழகத்தில் கலைத்துறைப் பிரிவில் விரிவுரையாளனாக இருக்கிறான், மனசுக்கு இதமளிக்கிற அந்தக்கலை அழகு என்றால் அவன் நிலை என்னவு

பாவங்களைச் சுமக்கிற உலகத்தில், அழகுணர்ச்சிக்கும், ரசனை

> இந்தக் கதை, வாழ்வில் கலக்க முடியாமல், நிழலாகவே நின்றுவிடும் ஒரு குறைப் பிறவியான அபலையைப் பற்றியது. இவள் போன்றவர்களை நான் சந்தித்திருக்கிறேன். இவர்களை யாரும் தட்டிக் கொடுப்பதில்லை. அதனாலேயேஅவர்கள் ஊனத்தில் இருளாக, வாழாமல் மறைந்து போகிறார்கள். இவர்களை வாழ்விக்க எவரும் அவ்வளவு எளிதில் முன்வருவதில்லை.

கும் வேதனை தரக்கூடிய, துன்ப மான இருட்டின் குரூரங்களி டையே, காட்சியழகின் நிழல், கண்களுக்கு மட்டும்தான்.

ஆனால் அவன் கண்களோ நிழலை நாடாது ஓங்கி உயர்ந்த ஒரு சோபையுடன், அறிவுடன் தோன் றிய ஒரு பெருமைக் கதிராய், அவன் முகத்திலே கம்பீரமும், அன்பு மாறாத ஆண்மை மிடுக்கும் கொண்டிருந்தான்.

அவனுடைய தந்தை சுவாமி நாதனுக்கோ வேறு நினைவு. இந் தப் பெண்வழியில் அவர்களுக்குப் பத்து லட்சம் வரப்போகிறதாம். வரட்டுமே! அதை வைத்துக் கொண்டு, அப்பா தேவனாகிவிடலா மென்று நம்புகிறாரோ? மனிதர் களுக்குத்தான் என்னே ஆசை! சுயநலம். டி. வியும் டெக்கும் வாங் கினால் பெருமை. அவனுக்கு எது வேண்டும்! முதலிலே பெண் வரட் டும்.

அவள் இருளிலே தூங்குகிற வளா? ஒளியில் வாழ்கிறவளா? திரை கலைந்து, அவள் வந்ததும் தான் தெரியப் போகிறதே!

சிறிது நேரத்தில், அவள் வந்து நின்றாள். இந்தப் பார்வை மனி தர்களிடையே, அவள் காட்சி வேறாக இருளிலே வெறிச் சோடை போனவள் போல், அசடு வழிய, அவள் சிரிக்கிறபோது, அவன் மிகவும் பரிதாபமாக, அவ ளைப் பார்த்துக் கொண்டே இருந் தான். வார்த்தெடுத்த, அச்சு மாறாத, ஒரு நீக்ரோபெண் மாதிரி, அவள் இருந்தாள். நல்ல கறுப்பு நிறமும், உப்பிச் சொரசொரத்த கன்னங்களுடன் கூடிய விசார மான முகமும் பிரமையில் திகைத்த, மங்கலான இருளடித்த பார்வையுமாய், அவனை நேருக்கு நேர், பார்க்கிறபோது கண் கூசி மனம் வெறுத்தது. சுவாமிநாதன் அதைப் பார்க்கப் பிடிக்காதவன் மாதிரி, வெளிச்சத்திலே முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

அவளைப் பெற்ற தகப்பன் சாம்ப சிவம் பொறுமையிழந்து தவித் துக் கொண்டிருந்தார். தாய் ருக்மணி. என்ன நடக்கப் போகி றதோ, என்று எதிர்பார்த்து வாச லிலே நின்று, தவித்துக் கொண் டிருந்தாள்.

வேறு என்ன நடக்கும்? பவம் இந்தக் கோதையைப் பார்த்து விட்டு. இவர்களெல்லாம் முகத் தைத் திருப்பிக் கொண்டு போய் விடுவார்கள். இப்படி எத்தனை பேர் வந்து போனார்கள். இன் னும் வருவார்கள். அவள் இப் படியேதான், ஒரு யுகத்துக்கு நிழ லாக, நின்று கொண்டிருப்பாள்! நிற்கட்டுமே! அவள் விதி.

கரையேற வழித்துணை கிடை யாமல், அவள் இன்னும் காத்துக் கொண்டிருக்கிறாள். ஒரு புருஷன் கிடைத்தால உத்தமம். புருஷ னுக்கு எங்கே போகிறது. எந்தப் புருஷனாலே அவளைச் சுமக்க மனம் வரும்? வெறும் பணம் வந்து, வாழ்வைத் தந்து விடுமா?

சுவாமிநாதன் இருப்புக் கொள் ளாமல், போக எழுந்து விட்டார். கூட வந்த மனைவியும் எழுந்து போகத் தயாரானார்.

"வாடா போவோம்.

இது பாஸ்கரனுக்கு விழிப்பாகக் கேட்ட போதிலும், அவன் என்னவோ நினைத்துக் கொண்டு, அவளையே இன்னும் பார்த்துக் கொண்டிருந்தவன். அதைக் கேட்டுவிட்டு, அவரைத் திரும்பிப் பார்த்தான்.

அப்பா! அவசரப்பட்டுப் போவது சரியில்லே. பதில் சொல்லவேணும். சிந்தித்துப் பதில் சொல்ல, எனக்கு அவகாசம் கொடுங்கோ.

"என்னடா இனிமேல் அவகாசம்? அதுதான் பார்த்துக் கொண்டிருக்கிறாயே."

"நீங்கள் பேசுவது வேடிக்கையாக இருக்கு. உங்கள் வயிற்றிலே இல்லே இரத்தத்திலே இப்படியொரு குறையோடு, பெண் பிறந்திருந்தால், என்ன செய்வீர்கள்?

"உனக்கு அதெல்லாம் எதற்கு, வேண்டாமென்றால், பிறகென்ன பேச்சு எனக்குப் பிடிக்கேலே."

"எனக்குப் பிடிக்கிறது .."

"உனக்கா...?"

"எனக்குத்தான்."

"நான் சொல்கிறேன். உனக்கு என்ன பிடித்திருக்கென்று சொல்லட்டுமா?"

அவன் மௌனமாக, யோசனை ஓடிய முகத்துடன், பார்வையைத் திருப்பிக் கொண்டான். அவர் குரல், தொடர்ந்து சன்னமாகக் கேட்டுக் கொண்டே இருந்தது.

"உனக்குப் பைத்தியம்தான்" பிடித்திருக்கு.

அவன் சிரித்தான்.

"அப்பா! நல்ல காரியம், செய்து நமக்குப் பயன் கிடைக்கிறதா என்று தேடுகிறோம். பலனை எதிர் பாராமல், ஒரு காரியம் பண்ணினால், அது உத்தமம். நான் தியாகம் என்று நினைத்துச் சொல்லவில்லே. இதிலே என்ன தியாகம்? எப்பவோ எல்லாவற்றையும், அர்ப்பணித்து விட்ட, பெருமையோடுதான், நான் பேசுகிறேன். இவளை இப்படியே விட்டுக் கொல்லுறதற்கு அது போதும். கொலை செய்கிறதை விட, வாழ விக்கிறது மேல் இல்லையா?

"அப்போ என்ன செய்யப் போறதாய், உன் முடிவு"

"இவளை ஏற்றுக் கொள்ளத் தீர்மானித்து விட்டேன்."

"டேய் இவளைக் கூட்டிக் கொண்டு, நீ எப்படியடா, மனிதர் முகத்திலே விழிப்பாய்?"

"அப்பா! உங்களுக்கு இந்தப் பெண்ணை விட, அதுதான் முக்கியமாக இருக்கு. எனக்கு மனிதர்களை விட, இது முக்கியம்"

"எது ... ?"

அவன் அதைச் சொல்லாமல், சட்டென்று முகத்தை உயர்த்தி அவளை பார்த்தான்.

"இப்படி வா"

அவன் அவளை அழைத்தான். என்னோடு பேசுவியா?"

"ம் ம்.."

'என்ன பதிலைக் காணோம். பயப்பிடுறியா?"

"இல்லே "

"அப்ப, சந்தோஷமா ?

அவள் சிரித்தாள்.

உனக்கு என்னைப் பிடிக்குதா?

அவள் மௌனமாகத் தலையாட்டினாள். அவன் அவள் மீது கருணை கொண்டிருக்கிற, வெறுப்பு இல்லாத தூய அன்போடு, அவளை நோக்கிக் கண்கலங்கியவாறே மேலே பேச்சைத் தொடர்ந்தான்.

நீ எதுக்கோ பயந்து சாகிறாய் போலிருக்கு. மனிதர்கள்தான், உன்னை இந்த விதமாக நம்பிக்கை இழக்கச் செய்து கொன்று விட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். இந்தத் தாழ்வு மனப்பான்மை, இனிமேல் உனக்குவரக் கூடாது எனக்கு உன்னை மிகவும் பிடித்திருக்கு. நீதான் எனக்கு மனைவியாக வரப்போகிறவள். நான் உன்னைச் சந்தோஷமாக வைத்துக் காப்பாற்றுவேன். இப்ப சிரி, பார்ப்போம்.

அவள் ஒரு குழந்தை போலத் தன்னுடைய பலவீனத்தை மறந்து, வாய் விட்டுச் சிரித்தாள். பாஸ்கரன் இதைப் பார்த்துவிட்டுத் தந்தையிடம் திரும்பினான். அவர் கோபம் மாறாமல், முகத்தைத் திருப்பியவாறு நின்றிருந்தார்.

“அப்பா! எல்லாம் சரியாகி விடாது. இராமர் காலடி பட்டு அகலிகை சாபம் தீர்ந்ததாம் இங்கே நடந்ததைப் பார்த்தீர்களா? என்ன கோபம். எனக்கு, இது பெருமை இல்லையா? நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?”

“நான் என்ன சொல்வது? உன் இஷ்டம் பெரிய யுக புருஷனுக்கு நான் சொல்லியா தரவேண்டும். இதில் விருப்பு, வெறுப்பு என்ன நான் முகத்தைத் திருப்பிக்) கொள்கிறேன்.) அவ்வளவே.

பாஸ்கரன் தொடர்ந்து வாதிட விரும்பாமல், அவரை அழைத்துக் கொண்டு வீட்டிற்குப் போனான். கல்யாணம் நடக்கும் வரை, அவர் தொண தொணத்துக் கொண்டேயிருந்தார். அவன் அதைச் சட்டை செய்யாமல், அவரை எதிர்த்துக் கொண்டு, அடுத்த மாதமே கோதையைத் தான் நினைத்தபடி கல்யாணம் செய்து கொண்டான். தனக்கு வேண்டிய எல்லோரையும் அழைத்து விருந்து வைத்தான்.

கோதை இப்போது வெளிச்சத்துக்கு வந்திருக்கிறாள். அவளை அந்த வெளிச்சத்திலே கொண்டு வந்து இறுதிப் பெருமை சேர்ந்துக் கொண்டிருக்கிற பாஸ்கரனோ, அதை வெளிக்காட்டிக் கொள்ள விரும்பாத, தனக்கு இயல்பான தோரணையுடன், யாரையும் லட்சியம் செய்யாமல், அடக்கமாக அவளருகே, ஒரு சாதாரண மாப்பிளையாகவே உட்கார்ந்திருந்தான். ஒவ்வொருவரும் அவனிடம் வந்து கை குலுக்கி விட்டுப் போனார்கள். கடைசியில் வாசு வந்து சேர்ந்தான். இவனுடைய நெருங்கிய சினேகிதன். இரண்டு பேருக்கும் சிறு வயதிலிருந்தே பழக்கம்.

“பாஸ்கர்! என்னோடு கொஞ்சம் வெளியே வருவியா?

மௌனமாக எழுந்து அவனோடு போனான்.

“என்னடா! இப்படிச் செய்திட்டாய்?”

“எனக்குப் புரியேல்லை ”

“நீ ஒரு நட்சத்திரம் என்று தெரியுமல்லே.”

“தெரியாமல் இருக்கிறேன்”

“தெரிந்து என்ன ஆச்சு?

“விழுந்திட்டியேடா!”

“நட்சத்திரம் விழுந்ததை எப்ப வாவது நீ பார்த்தியா? அது விழாமல், அப்படியே நின்று

இவளோடு நான் வாழும் ஒளி. பொருந்திய வாழ்க்கையைத் தரிசிக்க நீவருவாய்.

அவர்கள் பரிந்தனா. பாஸ்கரன்

உள்ளே போன போது அவளின் முகப்பிரகாசத்தை தன் மனக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

# "சுருதி மாற்றம்"

**ஜனகமகள் சிவஞானம்**

"காசை வாங்கேக்கை மட்டும், காலைப் பிடிச்சுக் கையைப்பிடிச்சி மாய்மாலக் கண்ணீர் விட்டு வாங்கிப் போடுவாய். திருப்பித் தரவேணுமெண்டு பிறகு நான் தான் உனக்கு ஞாபகப்படுத்த வேணும"

காட்டுக் கத்தலாய் செவிப்பறையில் மோதிய அக்கா சரோஜினியின் குரல் கேட்டுத் திடுக்குற்றவளாய், ஈரக்கையினைப் புடவைத் தலைப்பில் துடைத்து விட்டவாறு லக்ஷ்மி வெளியே வருகிறாள். நெஞ்சினுள்ள சுமையினும், வயிற்றினுள்ள இன்னொரு ஜீவனின் சுமையும் அவளைச் சிரமப்படுத்தினாலும் அதனையும் பொருட்படுத்தாதவளாய் லக்ஷ்மி விரைந்து வருகிறாள்.

"இதுக்கு மட்டும் குறைச்சலில்லை மூண்டு பெட்டை இந்த நாலாவதும் பெட்டைதானோ? ஆர் கண்டது" இரகசியமாய்த் தனக்குள் முணுமுணுத்தவாறு சரோஜினி தன் தோள்பட்டையில் இடித்துக் கொண்டமையின் காரணத்தினை லக்ஷ்மியால் ஓரளவு புரிந்து கொள்ள முடிந்தாலும் எந்தவிதமான பதிலும் சொல்லத் தோன்றாமல் மெல்லத் தலை குனிகிறாள்.

இந்த முறை எண்டாலும் ஒப்பிரேஷன் செய்யிற யோசனை இருக்கோ, இல்லையோ?"

"..."

"என்னைப் பார் மூண்டும் பொடியங்கள். மூண்டையும் ஒப்பிரேஷன் செய்து தான் எடுத்தது, உனக்குத் தெரிஞ்ச விஷயம் தானே லக்ஷ்மி மயக்கம் தெளிஞ்ச உடனே, நேஸ்மார் ஆம்பிளைப் பிள்ளை எண்ட உடனே எனக்கு உச்சி குளிர்ந்திடும் என்ரை வயித்தைக் கிறிக் கிழிச்ச நோவுகள் கூட அந்த நிமிஷமே பறந்து விடும், பெட்டை பிறந்திருந்தால் அந்த நிமிஷமே என்ரை உயிர் பிரிஞ்சாலும் ஆச்சரியப்படுவதுக்கில்லை"

தன்னுடைய இமாலய சாதனையின் புகழ்ச்சியினை சரோஜினி அவிழ்த்து விட்டுக்கொண்டிருக்கையில் லக்ஷ்மிக்கு மனதுக்குள் எரிச்சலெரிச்சலாகவே இருந்தது.

"இவவும் ஒரு பொம்பிளையாய் இருந்து கொண்டு பெட்டை எண்டு என்? இவ்வளவு இளக்காரம் பண்ணிற. கடவுளாலை தரப்பட்டு, பத்துமாதம் வயிற்றிலை சுமந்து பெற்ற பிள்ளை ஆணோ? பெண்ணோ? ஒரு தாய்க்கு எல்லாம் பிள்ளை தானே?

தனக்குள்ளாய் புழுங்கிறாள் லக்ஷ்மி மனதில் நினைத்ததை வெளியே சொல்லிக் கொள்ளும் தைரியமும்

தகுதியும் அற்றவள் அவள். இரண்டடுக்கு மாளிகையில் ஏழ்மை என்றால் என்னவென்றறியாத சரோஜினி எங்கே? வறுமைக்கு வாழ்க்கைப்பட்டுத் தினம், தினம் அல்லற்படும் இவள் எங்கே?

எனக்கேன் வீண் கதையள் என்னட்டை வாங்கின காசை எப்ப? லக்ஷ்மி நீ திருப்பித் தரப் போறாய்?

"வந்தக்கா, குத்தி வைச்ச குரக்கன் கிடந்தது. அதைக் கடைக்குக் குடுக்கப்போட்டார் வந்த உடனே உங்கடை காசைக் குடுததனுப்புகிறன் குறை நினைக்காதேங்கோ அக்கா"

லக்ஷ்மியின் பேச்சின் நாணயம் தெரிந்தோ என்னவோ, திரும்பி நடக்கக் காலெடுத்து வைத்த சரோஜினி,

"லக்ஷ்மி காசு கிடக்கட்டும். இப்ப வீட்டை குடுத்து விடாத பிறகு நான் வந்து எடுக்கிறன்",

'எனக்கா?'

உனக்குச் சொன்னாலென்ன? என்ரை மூத்தவனுக்குப் பொம்பிளை பார்க்கப் போகப்போறம். முழுவியளத்துக்கு அங்க வந்து நிக்காதையுங்கோ.,,

முகதிலறைந்தது போலக் கூறிவிட்டு விடுவிடென சரோஜினி போய்விட்டாலும், அந்த வார்த்தையின் தாக்குதலின் வேதனை மறைய லக்ஷ்மிக்குப் பலமணி நேரம் எடுத்தது. "எளியாரை வலியார் வருத்தின், வலியாரைத்தெய்வம் வருத்தும்" என்ற மனச்சமாதானத்தைத் தனக்குள் பிரகடனப்படுத்திக் கொண்டு மீண்டும் தன் வீட்டு வேலைகளுக்குள் மூழ்கிப் போகிறாள் லக்ஷ்மி.

லக்ஷ்மிக்கு நான்காவதாயும் ஒரு பெண் குழந்தை பிறந்து விட்டது. ஒரு பவுடரையும். ஒரு சவர்க்காரத்தையும்கொண்டு பிள்ளையைப்பார்க்க வேணும் என்ற சாட்டில் வருகிறாள் சரோஜினி.

"நாலாவதும் பெட்டை போலத்தான் கிடக்கெண்டு நான் முதலே. லக்ஷ்மிக்குச் சொன்னனான் .என்ன? லக்ஷ்மி!"

குசலம் விசாரிக்கவந்திருக்கும் இன்னொரு பெண்ணுக்குச் சொல்வது போன்ற சாட்டில் லக்ஷ்மியின் மனதை வார்த்தைகளால் சரோஜினி தைக்கிறாள். 'பெண் குழந்தைகள் என்றால் என் இத்தனை இளக்காரம்? சீர் கெட்டுப் போன இந்த சமுதாயம் சீதனம் என்ற ஒரு எல்லைக்குள் பெண்ணை ஏளனப்படுத்துவதாலா? ஏன் இத்த வக்கிர புத்தி என்ற கேள்விக்குப் பதில் புரியாதவளாய் தன் விழியோரங்களை நனைத்துக் கொள்வதைத் தவிர வேறொன்றையுமே அவளால் செய்ய முடியாது போய் விட்டது.

'என்ன? தான் செய்தாலும் பெத்த தாய் தகப்பனுக்குக் கொள்ளிவைக்க ஒரு ஆம்பிளைப் பிள்ளை இல்லை யெண்டால் நாங்கள் பிறந்ததில் ஒரு பலனுமே இல்லைப் பாருங்கோ

"உண்மைதான்"

கூட இருந்தவள் சரோஜினிக்கு ஒத்து ஊதுகிறாள்.

நாட்களின் விரைவில் மாதங்கள் இரண்டு கடத்து விட்டன. முதல் ஒரு மாதமும் துடக்கு வீடென்று சரோஜினி வந்து போகாமைக்குக் காரணத்தைத் தனக்குள்ளாய் கற்பித்துக் கொண்டாலும். பின்னணில் தன் வீரப்பிரதாபங்களை அளந்து கொட்டவும், பிறரின் ஒட்டை, உடைசல்களைக் குத்திக் காட்டி இன்பங் காண வென்றாலும் வந்து போயிருப்பாவே எனத்தனக்குள்ளாய் நினைத்த லக்ஷ்மி பக்கத்து வீட்டுக்கு வருகிறாள்.

'செல்லம்மாக்கா? சரோஜினி அக்காவைக் கன நாளாய் இந்தப் பக்கம் காணேல்லே என்ன விஷயம்?,,

"என்ன? லக்ஷ்மி தெரியாமலே கேக்கிறாய்"

"உண்மையாய் எனக் கொண்டும் தெரியாது,நான்குழந்தைப் பிள்ளைக்காறி எங்கையோ? வெளிக்கிடக் கொள்ள, வாறவை போறவையோடை கதைக்க எனக்கெங்கை அக்கா நேரம்.? என்னக்கா நடந்தது?"

'சரோஜினியின்ரை இரண்டாவது மோன் கொழும்பிலே இருந்து வாறனெண்டு எழுதினதாம். ஐந்து நாளாயும் இன்னும் வந்து சேரல்லையாம்".

"உண்மையாமே? அக்கா!"

"ஓமாம் கொழும்புக்கும் போன் பண்ணிக் கேட்டவையாம் பொடியன் வெளிக்கிட்டு வந்திட்டுதாம் எண்டு சொன்னதாம். பாவம் சரோஜினி. சாப்பாடு, தண்ணி, வெந்நி இல்லாமல் கிடந்து அழுது கொண்டிருக்குதாம். எத்தனை நாள், எத்தனை முறை லக்ஷ்மியின் இதயத்தை சரோஜினிகுத்திக்குதறியிருக்கிறாள். அப்படி இருந்தும் லக்ஷ்மி, சரோஜினிக்காய், அவவின் துயரத்துக்காய் பச்சாதப்பட்டாள்,வேதனையுற்றாள்

"இன்னுமொரு விஷயம் தெரியுமே?"

செல்லம்மா மெதுவாய் கிசுகிசுத்தில் அவளையே ஆச்சரியமாய் நோக்குகிறாள் லக்ஷ்மி

"இடிக்கு மேலே இடி யெண்டு சொல்லுவினம் அது சரோஜினிக்குத்தான் பொருத்தம்"

"செல்லம்மாக்கா நீங்கள் என்ன? சொல்லுறியள்"

"மூத்தவனுக்குப் பெரிய இடங்களிலே கலியாணங்கள் பேசிப் பொம்பிளை பார்த்துக்கொண்டு,தட்டிக் கழிச்சுக் கொண்டிருந்தவாவல்லே சரோஜினி"

"ஓம் எனக்கும் சொன்னவா."

"அவன் வேலை செய்யிற இடத்திலே ஒரு பெட்டையைத் தன்ரை பாட்டிலே விரும்பிச் செய்து கொண்டு இவவுக்கும் சொல்லாமல் வெளிநாட்டுக்குப் போட்டானாம், . எந்த இடம் எண்டும் தெரியாதாம்"

' 'ஐயோ?பாவம் "

"பாவமெண்டு சொல்லாதேஅவவின்ரை கொழுப்பை அடக்கத்தான் கடவுள் இந்தத் தண்டனையை இவவுக்குக் குடுத்திருக்கிறார் லக்ஷ்மி"

வீட்டுக்கு வந்த லக்ஷ்மியின் மனது இரக்கத்தின் காரணமாய் இம்சைக்குள்ளானது. சரோஜினி அக்காவைப் பாக்க வேணும். அவவுக்கு ஆறுதல் சொல்ல வேணும் என்று

ஒரு மனது துடித்தாலும்" என்ரை வேதனையைப் பாத்து எல்லாரும் சேந்து விடுப்பு, விண்ணணக் கதை அளக்கிறதுக்கு வந்திட்டியளோடி என சரோஜினி அக்கா சீறி விழுவா என்ற அச்சத்தில் இரண்டுங் கெட்டான் நிலையில் நின்று தவித்துக் கொண்டிருந்தாள் லக்ஷ்மி.

அன்றைய பொழுது கழிந்து விடி காலை வேளை. மனதின் ஆவலை அடக்கிக் கொள்ள மாட்டாதவளாய் எழுந்த லக்ஷ்மி,எணைக்குள் முனகிய குழந்தையைஆட்டி விட்டு, வாசலில் கிடந்த வாங்கில் படுத்திருந்த கணவனிடத்திலும் சொல்லிக் கொண்டு சரோஜினியின் வீட்டை நோக்கி விடுவிடென நடந்து வருகிறாள். வாசலில் கிடந்த நாய் மெல்ல உறுமி விட்டு மீண்டும் முடங்கிக் கொண்டதில் லக்ஷ்மி தைரியமாய் உள்ளே வருகிறாள். வீட்டில் உள்ளவர்களின் மனதில் துயரக் குப்பைகள் நிறைந்திருப்பதனைப் போன்று வீட்டு முற்றத்திலும், குப்பைகள் நிறைந்திருந்தன. வெறுமனே சாத்தியிருந்த கதவினைத் தள்ளித் திறந்து, சரோஜினி படுத்திருக்கும் இடத்தைத் தெரிந்து கொண்டு லக்ஷ்மி உள்ளே வருகிறாள்.

இவளைப் பார்த்ததும் எதுவுமே? பேசத் தோன்றாதவளாய் சரோஜினி குலுங்கிக், குலுங்கி அழுகிறாள். அவளுக்கு ஆறுதல் வார்த்தை சொல்லி ஆசுவாசப்படுத்துகிறாள் லக்ஷ்மி.

"எனக்கு மூண்டும் பொடியள் கண்டு எல்லாரும் பாத்துப் பாத்துப் கண்ணூறு பட்டுத்தான் எனக்கின்டைக்கு இந்த நிலை." இருந்தும் தனக்குள் பொருமுகிறாள் சரோஜினி."லொக்,லொக்" என இருமியவாறு நெஞ்சைத் தடவிக் கொண்டு வெளியே நடக்கிறார் சரோஜினியின் கணவன்.

"லக்ஷ்மி, அவர் ஹார்ட் பேஷன்ற் இந்தளவு இடிகளுக்குள்ளாலும் கடவுளின்ரை கருணை தான் அவரைக் காப்பாத்தி வைச்சிருக்கு"

இறுமாப்பினுள்ளும் இடித்து போகிறாள் சரோஜினி. தன்னால் முடிந்தளவு ஆறுதல் வார்த்தைகளை ஈத்து விட்டு லக்ஷ்மி திரும்ப எத்தனிக்கையில் சரோஜினி இடைமறிக்கிறாள்.

"லக்ஷ்மி அந்தக் கடைசி அறைக்கை என்ரை இளையவன் படுத்திருக்கிறான். அவனை எழுப்பி விட்டிட்டுப் போ"

ஒரு மனிதனுக்குத் துன்பங்கள் துயரங்கள் வரவேணும் என்ற நியதி இருந்தால் அதனை யாராலுமே தடுக்க முடியாது என்ற உண்மை லக்ஷ்மிக்கு நிதர்சனமாய் புரிந்தது. சரோஜினி குறிப்பிட்டது போல், அவவின் இளைய மகனை எழுப்பவென லக்ஷ்மி போகிறாள். அங்கே ..? அங்கே ?

வெறுமையான படுக்கையும் "தான் விருப்பப்பட்டு வீட்டை விட்டுப் போவதாயும், தன்னைத் தேட வேண்டாம்" என்ற ஒரு சிறு துண்டுக் கடிதம் மாத்திரமும் கிடக்கின்றன. லக்ஷ்மி விறைத்துப் போகிறாள்.

"இதை நான் அவரிட்டை எப்பிடிச் சொல்லப் போறன் நல்லதைப் போல ஒரு பொல்லாப்பு இவருக்கு நடந்திட்டால் கொள்ளி வைக்க, கடைசிக் கடமை செய்யக் கூட என்ரை கண்ணுக்கு முன்னாலை ஒரு பிள்ளையில்லையே" சரோஜினியைத் தேற்ற முனைந்து தோற்றுப் போய் நிற்கிறாள் லக்ஷ்மி.

எதிர்கால வளர்ச்சிக்கு ஏற்ப சிந்தனைகளைத் தொகுத்து நிகழ்கால வாழ்க்கையை நிறைவுபடுத்தும் முயற்சியாகவும், வாழ்க்கைப் பிரச்சனையை எதிர்கொள்வதற்கு வேண்டிய சாமர்த்தியத்தை, மனப்பக்குவத்தைத் தரும் ஊடகமாகவும் இந்நூலை வெளியிடுவதில் மகிழ்வடைகின்றோம்.

ஆறு இளம் எழுத்தாளர்களின் சிந்தனையில் மலர்ந்த **"மௌனங்கள் கலையும் போது ......"** தொடர்கதைத் தொகுப்பினை எமது 4. வது வெளியீடாகத் தருவதில் பெருமையடைகின்றோம். கற்பித்தல் தொழிலின் மகத்துவத்தினையும் மறுமலர்ச்சிக் கருத்துக்களையும் கொண்டமைந்த இக்கதை மக்கள் மனதில் நிலையான இடத்தைப் பெறும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

எனவே, எமது சமுதாயத்தில் புதிய சிந்தனைகளைத் தூவச் செய்து, புதிய உலகினைப் படைப்பதில் நான் வெளியீடுகள் ஒவ்வொன்றும் துணைநிற்கும் என்பதைத் துணிவோடு கூறி விடை பெறுகின்றோம்.


நான் வெளியீடு
NAAN PUBLICATIONS
அமலமரி தியாகிகள் சபை
யாழ்ப்பாணம்